॥ श्रीः ॥

# ॥ श्रीकामकोटिप्रदीपः ॥

# ஸ்ரீ காமகோடி ப்ரதீபம்

மலர் 15 விஸ்வாவஸு ௵ ஆனி-ஆடி ௴ ஜூலை 2026 இதழ் 7

- ச



ஸ்ரீ காஞ்சி
காமகோடி
பீடத்தின்
சார்பில்
வெளியிடுவோர் :
**ஸ்ரீ காமகோடி
கோஶஸ்தானம்**

# ஸ்ரீ காமகோடி ப்ரதீபம்
## ஆனி - ஆடி 2026



மலர் 15 ஜூலை 2026 இதழ் 7

பொருளடக்கம்


| | |
|---|---|
| ப்ரார்த்தனை | 3 |
| ஆசிரியர் பக்கம் | 4 |
| தெய்வத்தின் குரல் | 7 |
| பூஜ்யஸ்ரீ சந்த்ரசேகரேந்த்ர ஸரஸ்வதி ஸங்கராசார்ய ஸ்வாமிகள் | |
| நீதிக் கதைகள் | 9 |
| பூஜ்யஸ்ரீ ஜயேந்த்ர ஸரஸ்வதி ஸங்கராசார்ய ஸ்வாமிகள் | |
| அனுக்கிரஹ பாஷணம் | 13 |
| பூஜ்யஸ்ரீ சங்கர விஜயேந்த்ர ஸரஸ்வதி ஸங்கராசார்ய ஸ்வாமிகள் | |
| ஸூத ஸம்ஹிதை - தமிழ் விளக்க உரை | 16 |
| அநுகீதாபர்வம் | 19 |
| விறன்மிண்ட நாயனார் | 21 |
| ஸ்ரீ அமரநாத மாஹாத்மியம் | 23 |
| ஆடி மாத விசேஷ தினங்கள் | 25 |
| முகாம் நிகழ்ச்சிகள் | 26 |
| பாரதப் பாதையில் - தர்மம் உபாக்யானங்களின் வழியே | 31 |
| ஆயுர்வேதமும் - ஸுபாஷிதமும் | 35 |
| வேதாந்த ஸம்வத்ஸரம் | 38 |
| வேத ஸூக்தங்கள் | 39 |
| சுக்ர நீதி | 40 |
| மஹா பெரியவாளின் நினைவு மஞ்சரி | 42 |
| கண்டாகர்ணன் | 45 |
| தட்சிணாமூர்த்தி துதி | 48 |


भाग्योदयेन बहुजन्मसमार्जितेन सत्संगमं च लभते पुरुषो यदा वै।
अज्ञानहेतुकृतमोहमदान्धकारनाशं विधाय च सदोदयते विवेकः।।

Man obtains the contact of saints only when the merits earned by him through many births ripen. Wisdom dawns in the wake of such contact dispersing the darkness of infatuation and arrogance which have their root in ignorance.


நிர்வாகக் குழு

ஸ்ரீ K. ஜயராமகிருஷ்ணன்

டாக்டர் வெங்குடி B. ரிஷிகேசன்


# ஸ்ரீ காமகோடி ப்ரதீபம்


கௌரவ தலைமை ஆசிரியர் :

டாக்டர் S. மணி திராவிட் சாஸ்த்ரி

ஆசிரியர் குழு :

டாக்டர் R.கிருஷ்ணமூர்த்தி சாஸ்த்ரிகள்

ஸ்ரீ T. N. ராமசந்திரன்

ஸ்ரீ T. S. ராகவன்

பேராசிரியர் விஷ்ணுபோத்தி V.S.

ப்ரஹ்மஸ்ரீ ஸ்ரீரமண சர்மா



வெளியிடுவோர் :

ஸ்ரீ காஞ்சீ காமகோடி பீடத்தின் சார்பில்
ஸ்ரீகாமகோடி கோசஸ்தானம்

அலுவலக முகவரி :

ஸ்ரீ காஞ்சீ காமகோடி பீடம்
நெ.1.சாலைத்தெரு,
காஞ்சீபுரம் - 631502.
தொலைபேசி : 044 - 27222115

மின் அஞ்சல் :
kamakotipradeepam@gmail.com


சந்தா விவரம்

| | |
|---|---|
| ஒரு இதழ் | ரூ. 20/- |
| ஒரு வருடத்திற்கு | ரூ. 220/- |
| மூன்று வருடங்களுக்கு | ரூ. 600/- |
| ஐந்து வருடங்களுக்கு | ரூ. 1000/- |
| ஆயுள் சந்தா | ரூ. 5000/- |
| புரவலர் | ரூ. 10000/- |

Published by : Sri Kamakoti Kosasthanam on behalf of Sri Kanchi Kamakoti Peetam, No1, Salai Street, Kancheepuram - 631502. Ph : 044 - 27222115.

Periodicity : Monthly.

Printed at : Jai Ganesh Offset, Chennai.



श्रुतिशिखरसमुत्थस्तत्त्वसंवित्प्रकाशः कलितिमिरनिवृत्त्यै कल्पमानश्चकास्तु ।
शिवगुरुसुतमार्गं दीपयन् चन्द्रमौलेः शिशिरकरुणया श्रीकामकोटिप्रदीपः ।।

कामकोटिप्रदीपोऽयं सतां विभ्राजतां गृहे ।
यत्प्रकाशलवात्सद्यः पापध्वान्तो हतो भवेत् ।।

# ப்ரார்த்தனை

# प्रार्थना

**_ப்ரார்த்தனை_**

*உம்பர்தருத் தேனுமணிக் கசிவாகி*
*ஒண்கடலில் தேன் அமுதத்து உணர்வூறி*
*இன்பரஸத்தே பருகிப் பலகாலும்*
*என்றன் உயிருக்கு ஆதரவுற் றருள்வாயே*
*தம்பி தனக்காக வனத்து அணைவோனே*
*தந்தை வலத்தால் அருள்கைக் கனியோனே*
*அன்பர்தமக் கான நிலைப் பொருளோனே*
*ஐந்து கரத்து ஆனைமுகப் பெருமாளே*

*பொருள் : தனது தம்பியாகிய முருகப் பெருமானுக்காக தினைப் புனத்தில் வந்த வினாயகப் பெருமானே தந்தை ஈசனிடமிருந்து அருட்கனியைப் பெற்ற நாதரே ! ஏத்துகின்ற அன்பர்களுக்கு நிலைப் பொருளாகியவரே! ஐந்து கரங்களை உடைய ஆனை முகத்தோனே! பெருமைக்கு உரியவரே! தேவலோகத்து கற்பகமும், காமதேனுவும், சிந்தாமணியும் கடலில் தோன்றிய தேன் போன்ற அமுதம் எனச் சிறப்புறும் பாங்கில் பலகாலம் எனது உணர்வானது மகிழ்ச்சி கொள்ள என்னுயிருக்கு ஆதரவு தந்து அருள்வீராக.*

**_அருணகிரிநாதர் திருப்புகழ்_**

# ஆசிரியர் பக்கம்

## வ்யாஸ பகவானின் தர்மகோஷம்

*இளம்பூரணர்*

மாதபித்ருஸஹஸ்ராணி புத்ரதாரசதானி ।
ஸம்ஸாரேஷ்வனுபூதானி யாந்தி யாஸ்யந்தி சாபரே ॥ 1

ஹர்ஷஸ்தானஸஹஸ்ராணி பயஸ்தான சதானி ।
திவஸே திவஸே மூடமாவிசந்தி ந பண்டிதம் ॥ 2

ஊர்த்வபாஹுு விரம்யேஷ ந ச கச்சித் ஸ்ருணோதி மே ।
தர்மாதர்தஸ்ச காமஸ்ச ஸ கிமர்தம் ந ஸேவ்யதே ॥ 3

ந ஜாது காமான் நபயான் ந லோபாத்
தர்மம் த்யஜேத்ஜாவிதஸ்யாபி ஹேதோ:
நித்யோ தர்ம: ஸுகதுக்கே த்வனித்யே
ஜீவோ நித்யோ ஹேதுரஸ்ய த்வனித்ய: ॥ 4

இமாம் பாரத ஸாவித்ரீம் ப்ராதருத்தாய ய: படேத்
ஸ பாரதபலம் ப்ராப்ய பரம் ப்ரம்மாதிகச்சதி ॥ 5

நமது ஸனாதன மதத்தின் தாத்பர்யத்தை பல கூறுகளாக மக்கள் அனைவருக்கும் வழங்கியவர் வ்யாஸ பகவான். பாரதம் எழுதி முடித்தபின் அவருடைய முடிவான கொள்கை என்ன என்பதை 'பரத ஸாவித்ரீ' எனும் பெயர் கொண்ட நான்கு ஸ்லோகங்களில் கூறுகிறார். நம் நாட்டு எந்த ரிஷிக்கும் தர்மம் மீதுதான் மதிப்பு. வ்யாஸரும் அதற்கு விதி விலக்கல்ல.

''நெரு நல் உளன் இன்றில்லை எனும்
பெருமைபடைத்து இவ்வுலகு''

என்பார் வள்ளுவர்.

அதுபோலவே ஒவ்வொரு ஜீவனுக்கும் பிறவிகள் மூலமாக பல தாய் தந்தையர் வருவதும் போவதுமாய் இருக்கின்றது. உண்மையில் போக்கும் வரவும் இல்லா புண்ணியனின் அம்சமாகிய ஜீவாத்மா இவைகளை உண்மை என்று நம்பி ஏமாறுகிறது. மகிழ்ச்சிக்கு பலவிடங்கள், துக்கத்துக்கு பலவிடங்கள். ஒரு பிறவியிலேயே பல சுக துக்க நிகழ்ச்சிகள் என்றால் எத்தனை பிறவிகளில் எத்தனை சுகதுக்கங்கள். ப்ரம்மிப்பாய் உள்ளது. இவைகளைப் பற்றிக் கவலை கொள்ளாமல் இருக்க வேண்டும் என்கிறார் வ்யாஸர்.

**மூடனாய் அழாதே, பண்டிதனாய் தைர்யமாயிரு** என்பது தாத்பர்யம். இவை இரண்டு ஸ்லோகங்களும் மனித வாழ்வின் அனித்யத்தைக் காட்டும்.

வ்யாஸ பகவான் தர்ம ஸ்வரூபி. தன் அத்தனை கிரந்தங்களிலும் தர்மம் பெரியது என்று கோஷித்தவர். ''**தர்மோரக்ஷதி ரக்ஷித:**'' என்றும் ''**பரோபகாராய புண்யாய பாபாய பரபீடனம்**'' என்று பல கதைகளின் மூலமாக தர்மத்தைப் பரப்பினார். அப்படி இருந்தும் மக்கள் தர்ம வழியில் போகாமல் இருப்பதை பார்த்து வெறுத்து ''**கைகளைத் தூக்கி தர்மத்தில் இருந்து தான் அதர்மம் தர்மத்தில் இருந்து தான் காமம்** என்று **கதறுகிறேனே யாரும் கேட்பார் இல்லையே**'' என்று கூவுகிறார். அவர் காலத்திலேயே அப்படி என்றால் இக்காலத்தைப் பற்றி கேட்க வேண்டாம்.

மக்கள் அதர்ம வழியை நாடுவதன் காரணம் பேராசை. அச்சம், லோபம் ஒன்று இருந்தாலே அதர்மம் தான். மூன்றும் சேர்ந்திருந்தால் அதர்மத்திற்குக் கேட்கவே வேண்டாம். ஜீவிக்க வேண்டும் எனும் குறிக்கோளுக்காக இந்த மூன்றில் எதையும் மனிதன் கடைபிடிக்கக் கூடாது. அவனது குறிக்கோள் ''**வையத்துள் வாழ்வாங்கு வாழ வேண்டும்**'' என்பதாய் இருக்க வேண்டும். தர்மத்தை விட்டு இம்மூன்றையும் தழுவி வாழக் கூடாது. அதிகாரத்தில் உள்ளவர்களின் நடவடிக்கை இப்படித் தான் உள்ளது. தர்மம் நித்யமானது, சுக துக்கங்கள் அனித்யமானவை. ஜீவன் நித்யமானவன். அவனுக்குக் காரணம் அனித்யமான மாயை என்று நான்கு ஸ்லோகங்களில் கூறி தர்ம கோஷம் செய்கிறார். இந்த ஸ்லோகங்களில் எந்த ஒரு தேவதையையும் அவர் உபாசிக்கச் சொல்லவில்லை. தர்மத்தையே ஸ்வாமியாகக் கொண்டு அதன் வழி நடக்கச் சொல்கிறார். நாஸ்திகர்களுக்கும் இது பொருந்தும்.

வ்யாஸ பகவான் பரம கருணாமூர்த்தி. மக்கள்பால் கருணை கொண்டு இந்த நான்கு ஸ்லோகங்களை எவன் காலையில் படிக்கிறானோ அவன் ப்ரம்மமாகவே ஆகி விடுவான் என்று பலஸ்ருதியாகக் கூறி முடிக்கிறார். இதற்கு ''**பாரதஸாவித்ரீ**'' என்று பெயர். சுருக்கமாக இதைப் பார்ப்போம்.

சுக துக்கங்களுக்கு ஆட்பட்டு மனிதன் மூடனாய் இருக்க கூடாது. பண்டிதனாய் அவைகளுக்கு அப்பாற்பட்டு இருக்க வேண்டும். தர்மம் தான் அர்த்தம், காமம், இவற்றிற்கு ஆதாரம். எக்காரணம் கொண்டும் தர்மத்தை விட்டு செயல்பட கூடாது. தர்மம் பெரியது. நித்யமானது. சுக துக்கங்கள் அனித்யமானவை.

இந்த தர்ம கோஷம் எல்லாருக்காகவும் சொல்லப்பட்டது. குரு பூர்ணிமை அன்று இதைப் படிப்போம். அது மட்டும் அல்லாமல் அவர் கூறிய தர்ம கோஷத்தின் படி நடப்போம். இதுவே அவருக்கு நாம் செய்யும் வ்யாஸ பூஜை. அதற்கு நன்றி என்று கூறி இவ்விதழை ஸ்ரீ சரணர்களின் பொற்பாதங்களில் ஸமர்ப்பிக்கிறோம்.


**வேத ரக்ஷண நிதிக்கு பணம் அனுப்ப வேண்டிய தகவல்கள்**

**VEDA RAKSHANA NIDHI TRUST**

**ICICI Bank** T. Nagar, Chennai 17, A/c. No. 602 601205 431

**IFSC Code :** ICIC 0006026

**Bank of Baroda** A/c No. 05320100002089 IFSC CODE barb0chenbs

**Indian Bank** West Mambalam A/c. No. 418622532 IFSC IDIB 000w005

**Canara Bank** West Mambalam A/c No. 0917101041732 IFSC CNRB 0002616

**Indian Bank** Mutt Branch, Kancheepuram **A/c No. 411552514 IFSC IDIB b0005085**

பண உதவி செய்பவர்கள் எவ்வளவு தொகை வேண்டுமானாலும் அனுப்பலாம். செலுத்துபவர் அவருடைய PAN No. ஐயும், கோத்ரம், நக்ஷத்ரம், செல் போன் எண் முதலியவைகளை ட்ரஸ்டுக்குத் தெரிவிக்கவும்.

வேத ரக்ஷண நிதிக்குப் பணம் அனுப்புபவர்கள் விவரத்தை கீழ்கண்ட இ. மெயிலுக்கு அனுப்புமாறு கேட்டுக் கொள்கிறோம்.

VRNT e.mail :
office@vrnt.org <mailto : office@vrnt.org>
Phone : 044 - 24740549

# தெய்வத்தின் குரல்

**ஜகத்குரு பூஜ்யஸ்ரீ சந்த்ரசேகரேந்த்ர ஸரஸ்வதி சங்கராசார்ய ஸ்வாமிகள்**

## பஞ்ச கவ்யம்



லௌகிகமாக வெளி அசுத்தியைப் போக்குவதை விட முக்யம், வைதிகமாக அது உள் அசுத்தியையும் போக்குவதே. மற்ற ஜந்துக்கள் விஷயத்தில் மூக்கைப் பிடித்துக் கொண்டு அலம்பித் தள்ள வேண்டியதாக இருக்கிற மலத்தையே அது கோவிடமிருந்து கோமயமாக வருகிற போது நம்முடைய உள்ள அழுக்கைப் போக்கிக் கொள்வதற்காக நாம் உட்கொள்ளும் பஞ்ச கவ்யத்தில் ஒரு வஸ்துவாகச் சேர்க்கும்படி சாஸ்திரத்தில் விதித்திருக்கிறது.

'பஞ்சகவ்யம்' என்றால் என்ன? 'கவ்யம்' (gavyam) என்றால் கோ ஸம்பந்தப்பட்டது. அப்படிப்பட்ட ஐந்து சேர்ந்ததே பஞ்சகவ்யம். அதில் மூன்று – பாலும், பாலில் இருந்து பெறுகிற தயிரும், நெய்யுமாகும். பாக்கி இரண்டு? இங்கே தான் எதிரிடையானவையும் வருகின்றன. கோமயமும், கோமூத்திரமும் தான் அந்தப் பாக்கி இரண்டு. பால், தயிர், நெய், கோமூத்திரம், கோமயம் என்ற ஐந்தையும் கலந்து செய்வது பஞ்ச கவ்யம். **க்ஷீரம், ததி, ததா சாஜ்யம், மூத்ரம், கோமயம் ஏவ ச** என்று சொல்லி இருக்கிறது. ஒருவருக்கு ஏற்பட்ட விழுப்பு, தீட்டுகளைப் போக்குகிற புண்யாஹவாசன கர்மாவில் **'பஞ்சகவ்ய ப்ராசனம்'**

என்பதாக இந்த ஐந்தையும் சேர்த்த ஒன்றைக் கொடுப்பார்கள். அதை உட்கொள்ள வேண்டும். வெளியிலே விழுப்பு போய் மடியாவது என்ற சுத்திகரணம் பஞ்ச கவ்யத்தினால் நடக்கிறது என்றாலும் அதுவே அதன் முக்ய ப்ரயோஜனம் இல்லை. அதனுடைய முக்ய ப்ரயோஜனம் இதைவிடப் பெரிய சுத்தி கரணமாக, நமக்கு உள்ள அழுக்கை உண்டாக்கிய பூர்வ கர்ம பாபத்தையே போக்குவது தான்.

ஸாதாரண விஷயமில்லை. நம்முடைய கஷ்டங்கள், ஜன்மாக்கள் எல்லாவற்றுக்கும் காரணம் பாபகர்மாக்கள் தான். அவையே நசிப்பது என்றால் எவ்வளவு பெரிய விஷயம்? அதற்குப் பசு தருகிற ஐந்து வஸ்துக்கள் உதவுகின்றன என்றால் பசுவைப் போன்ற பரம உபகாரி நமக்கு எவர் உண்டு?

சரீர சுத்தியோடேயே, சித்தத்துக்குப் பரம அசுத்தியை உண்டாக்கும் பாபமாகிற அசுத்தத்தையும் நிவர்த்தித்துக் கொள்ளப் பஞ்ச கவ்யம் உதவுகிறது. சித்தத்துக்கு ஏற்பட்ட பாப அசுத்தியே சரீரத்தில் தோலிலிருந்து ஆரம்பித்து எலும்புக் குருத்து வரையில் பலவித வியாதிகளாகப் பரவுகிறது. இந்த வெளி வியாதி உள் வியாதி இரண்டையும் சுட்டு எரிக்கவே பஞ்சகவ்ய ப்ராசனம். 'ஒரு கட்டையை அக்னி பஸ்மம் பண்ணுகிறாற் போல நான் உட்கொள்ளும் இந்தப் பஞ்சகவ்யம் சர்மத்திலிருந்து (தோலிலிருந்து) அஸ்தி (எலும்பு) வரை என் தேஹத்தில் ஊடுருவியுள்ள பாபத்தை பஸ்மம் பண்ணட்டும்' என்றே பஞ்சகவ்ய ப்ராசனத்தின் (உட்கொள்தலின்) போது சொல்லும்படி சாஸ்த்ரத்தில் விதித்திருக்கிறது:

**யத் த்வக்-அஸ்தி கதம் பாபம் தேஹே திஷ்டதி மாமகே ।**
**ப்ராசனம் பஞ்சகவ்யஸ்ய தஹத்வாக்நிவேந்தனம் ॥**

**'தஹது அக்நி: இவ இந்தனம்'** என்பதே ஸந்தியில் **'தஹத்வாக்நிரிவேந்தனம்'** என்று ஆகியிருக்கிறது. **'இந்தனம்'** என்றால் **'விறகு'**. விறகை நெருப்பு எரிக்கிற மாதிரிப் பாபத்தைப் பஞ்ச கவ்யம் எரித்து விடட்டும் என்று அர்த்தம்.

கோவிலிருந்து கிடைக்கும் பாலில் இருந்து சாணி வரையில் எல்லாமும் நம் வியாதிகளைப் போக்கிப் புஷ்டியும் தருகின்றன; பாபத்தைப் போக்கி ஆத்மாவைக் கடைத்தேற்றவும் செய்கின்றன. பால், தயிர், மோர், வெண்ணெய், நெய் ஆகிய இந்த எல்லாவற்றுக்கும் இருக்கிற நாலு சிறப்புக்கள்; ஒன்று, அவை வாய்க்கு ருசியாக இருக்கின்றன; இரண்டு, உடம்புக்குப் புஷ்டி அளிக்கின்றன; மூன்று, ஆஹாரமாக இருப்பதோடு மருந்தாகவும் இருக்கின்றன; நாலு, வைதிக ப்ரயோஜனம் உடையவையாக இருந்து கொண்டு பாபத்தைப் போக்கி ஆத்மாவை ரக்ஷித்துக் கொடுக்கின்றன. (தொடரும்)

# நீதிக் கதைகள்

ஜகத்குரு பூஜ்யஸ்ரீ ஜயேந்த்ர ஸரஸ்வதி சங்கராசார்ய ஸ்வாமிகள்

## பக்தியும் பண்பாடும்



ஆகவே கூட்டம் குறைவானாலும், கூட்டத்தை, கும்பலை வைத்து எடை போடாமல், இந்து மதத்தின் கருத்துக்களை வந்தவர்கள் புரிந்து கொள்ளும்படி விளக்குங்கள், அதுவே போதும்.

### இந்த மனிதன் சென்றது எந்த சந்திர மண்டலம் ?

வான மண்டலத்தில் எத்தனையோ இருக்கின்றன! அமெரிக்காவும், ரஷ்யாவும், சந்திரனுக்குப் போனோம் என்றும் அதில் இறங்கி நடந்தோம் என்றும் பெருமை அடித்துக் கொள்கிறார்கள். ஆனால், அவர்கள் உண்மையில் 'எந்த சந்திர மண்டலம் சென்று வந்தீர்கள்' என்று கேட்டால் மௌனியாவார்கள்!

ஆகாயத்தில் அநேக கோள்கள் இருக்கின்றன. அதில் பல மண்டலங்கள் இருக்கின்றன ! நம்முடைய கண்ணுக்கு, சில கோள்கள்தான் தெரிகின்றன. பல கோள்கள் தெரிவதில்லை.

நம் கண்ணுக்குப் புலப்படும் 'சந்திரன்' மிகவும் வெப்பம் உடையது. உங்களுக்கு வியப்பாக இருக்கிறதா? 'ஐஸ்' சாப்பிடுகிறோம்! அது நமக்குச் சாப்பிடும் போது 'ஜில்' என்று, குளிர்ச்சியாக இருக்கிறது. ஆனால் அது வயிற்றில் சென்றவுடன் குளிர்ச்சியாகவா இருக்கிறது? சூடாகி விடவில்லையா?

அதுபோல, கண்ணுக்குத் தெரியும் சந்திரனில் நடந்ததாக, வண்டி வாகனம் விட்டதாக வல்லரசுகள் கூறிக் கொண்டு இருக்கின்றன. உண்மையில் ஒளிவிட்டுப் பிரகாசிக்கும், நாம் தினமும் பார்க்கும் சந்திரனுக்கு இவர்கள் போகவில்லை.

விண்ணில் பல சந்திர மண்டலங்கள் இருக்கின்றன! வேதத்தில் கூறப்பட்டுள்ளவற்றை நோக்கினால் தான் உங்களுக்குப் புரியும். உருவ அமைப்போடு வழிபடும் 'சந்திரன்' நவக்கிரகத்தில் இருக்கிறான். இளம் பிறைச் சந்திரன் சிவபெருமான் தலையில் இருக்கிறான். தேய்வோ, வளர்ச்சியோ அவனுக்குக் கிடையாது. ஆனால் சூரியனிடம் இருந்து ஒளிபெற்று வீசும் சந்திரன் நமக்குக் குளிர்ச்சியாகத் தோன்றுகிறது. அதன் வெப்பத்தை - மனிதன் தாங்க முடியாது. அப்படி இருக்க- இவன் - அங்கே எப்படிச் செல்ல முடியும்? ஆகவே இந்த மனிதன் சந்திர மண்டலம் போயிருக்க நியாயம் இல்லை.

## ஒன்றின்றி ஒன்று உயிர் வாழமுடியுமா ?

மறுபிறப்பில் நம்பிக்கை உடையவர்கள், மறுபிறப்பு இல்லை என்று கூறுபவர்கள், இருவருமே நேராக மோட்ச லோகம் அதாவது 'சொர்க்கம்' அடைவார்கள்.

மறுபிறப்பில் நம்பிக்கை இல்லாதவர்கள், மறுபிறப்பு உடையவர்கள் -சந்திர மண்டலத்திற்கு சென்று சுகம் அனுபவித்து - மீண்டும் உலகத்தில் பிறக்கிறார்கள்.

சந்திர மண்டலம் போய் வந்ததாகக் கூறினார்களே இதிலிருந்து ஓர் உண்மை எனக்குக் கிடைத்தது ! இந்த உயிர் அந்த இடம் போய் சேர்வதற்கும், வேறு காற்று தேவைப்படுகிறது ! அந்த இடத்தில் இவன் காற்றுக்கு வேலை இல்லை ! பயன்படவும் இல்லை. ஆகவே ஒன்றின் துணையின்றி ஒன்று உயிர் வாழ முடியாது என்பது இதன் மூலம் தெரிகிறதல்லவா? இவன் உயிர் வாழ- அந்த உலகத்திலும், வேறொன்றின் துணையை நாடத்தானே செய்கிறான் என்பதை நாம் உணர வேண்டும்.

## 'ஜகத்குரு' என்பதன் பொருள் விளக்கம் !

நான் வட இந்திய புனித யாத்திரை செய்யும் போது ஓரிடத்தில் தங்கினேன் ! அப்போது ஒருவர் என்னிடம் வந்தார். 'நீங்கள்' 'ஜகத்குரு' என்கிறீர்களே ! உலகத்திற்கு எல்லாம் நீங்கள் எப்படி குருவாக முடியும்? என்று கேட்டார் !

அவருக்கு ஏற்பட்ட சந்தேகத்தைத் தீர்த்தேன் ! எல்லா மூர்த்தங்களும் மூர்த்தி நிலை உடையது. தனித் தனியே இருக்கும் மூர்த்தங்களை ஈசனாக நாங்கள் வழிபடுகிறோம் ! முத்தொழிலுக்கும் ஈசன் தான் முழு முதற் பொருளாகிறான் ! உள்ளத்தில் சக்தியும் (அம்பாள்) சின்னத்தில் சிவச்சின்னமும் நாவில் விஷ்ணுவும் (உச்சரிக்கும் போது வைத்திருப்பவரே உண்மையான இந்து ஆவார் ! அவரே உலகத்தின் 'குருவும்' ஆவார்.

'ஆகவே, நாங்கள் ஜகத்குரு' என்பதில் தவறு இல்லையே ! என்று விளக்கம் சொன்ன போது, வந்தவர் உண்மையை உணர்ந்து வாய்மூடி, வணங்கிப் போனார்.

**அமிர்தசரசில் அற்புத கோயில்**

ஆயிரமாயிரம் ஆண்டுகளாக-சீக்கியர்கள் வாழும் பகுதி பஞ்சாப் எனப்படும் !

நெஞ்சு துணிச்சல் உடையவர்கள் ! நேர்மையானவர்கள் ! குருவை வணங்கிடும் கோட்பாடு உடையவர்கள். இந்தியாவில் பண்பாடு உடைய மாநிலம் பஞ்சாப் மாநிலம் ! பிச்சைக்காரர்களே இல்லாத மாநிலம் ! உழைப்பின் உயர்வை உணர்ந்தவர்கள். வாழும் மாநிலம் ! இங்கே அமிர்தசரஸ் என்ற அவர்கள் புண்ணிய தலத்திற்கு அழைத்துச் சென்றார்கள். பிற மத ஆலயங்களை இங்கே எங்கேயும் காணமுடியாது !

குரு நானக்கின் கொள்கைகளை ஏற்றுக் கொண்டு அவரையே தெய்வமாக வணங்கி வரும் பூமி அது !

அங்கு ஒருநாள் என்னை அழைத்து - என்றும் - எவரும் கண்டிராத அளவுக்கு சிறப்பான வரவேற்பு அளித்தார்கள் ! அப்போது, சீக்கியர்களில் ஒருவர்- நாங்களும் உங்கள் இந்து மதத்தில் ஈடுபாடு கொள்ள முடியுமா ! ' என்றார். அதற்கு நான் திருஷ்டாந்தமாக விளக்கம் கொடுத்தேன்.

சீக்கியர்களிடத்தில் உள்ள ஒழுங்கும் கட்டுப்பாடும் வேறு இடத்தில் காண்பது அரிது தான்!

'எங்களுக்குக் கண்ணன் கீதையிலே உபதேசம் செய்தாலும், துஷ்டர்களை, அதர்மத்தை ஒழிக்க அர்ச்சுனனை இடுப்பில் வாள் வைத்திருக்க சொன்னார் பகவான் !

'அதுபோல, உங்கள் குருவாகிய குருநானக் என்பவரும், ஐந்து அங்கங்களை அடையாளங்களை இடுப்பில் கத்தியை வைக்கச் சொன்னார் ! அடிப்படைக் கருத்தில் இரண்டும் ஒன்று தான் ! ஆகவே, நீங்கள் என்னிடத்தில்- இந்து மதத்தில் தாராளமாக ஈடுபாடு கொள்ளலாம்' என்றேன்.

பரம்பொருள் ஒன்றுதான் ! விநாயகரும், முருகனும், அம்பாளும், விஷ்ணுவும், அனைத்து- மூர்த்தங்களும், பரம் பொருளாம், ஈசனின் கூறுபாடுகள் ! ஈசன் ஒருவனே என்று ஏற்றுக் கொண்டுள்ள மதம் இந்து மதம் ! 'ஒன்றே குலம் ஒருவனே தேவன்' என்பதும் திருமூலர் வாக்குதானே !

**இந்து என்பவன் யார்?**

எவன் ஒருவன் 'ஈசன் ஒருவன்' என ஏற்றுக் கொள்கிறானோ, உருவ வழிபாட்டினைச் செய்கிறானோ, கோயிலுக்குச் சென்று இறைவனை வழிபடுகிறானோ, சிவச்

சின்னங்களை அணிந்து அனுஷ்டானங்களை ஏற்று நடத்துகிறானோ, அவனே 'இந்து' என்பவன் ஆவான் என்ற விளக்கத்தைச் சொன்னேன் ! அமிர்தசரஸ் - பொற் கோயிலில் அமர்ந்திருந்த அத்தனை சீக்கியர்கள் முகத்திலும் மகிழ்ச்சி வெள்ளம் கரை புரண்டோடியது.

**அங்கத்தைத் தீயிலிட்டு அக்னியைக் கெடுக்க மாட்டோம் !**

பார்சிக்காரர்கள் வாழும் பகுதிக்குச் சென்றேன். அக்கினியைக் கடவுளாக வணங்கும் இவர்கள் இறந்தவர்களை நெருப்பில் இடும் வழக்கமில்லை. இறந்தவரின் உடலை இழுத்தெறிந்து கழுகுக்கும், காக்கைக்கும், பருந்துக்கும், பிராணிகளுக்கும் இரையாக்கி விடுகிறார்கள் !

அவர்கள் பண்பாட்டினை நீங்கள் இப்போது கேட்கும் போது, ஆச்சரியப்படுகிறீர்கள். நானும் அவர் கள் நாகரிகத்தை, பண்பாட்டை, பழக்க வழக்கங்களை அறிந்து கொள்ள விரும்பினேன். 'நீங்கள் ஏன் இறந்தவர்களைத் தீயில் இடுவதில்லை?' என்று ஒரு வயது முதிர்ந்த பெரியவரிடத்தில் கேட்டேன். அவர் கூறினார்: 'அக்கினியை ஆண்டவனாக வணங்கும் பழக்கம் உடையவர்கள் பார்சிக்காரர்கள். அக்கினியை ஆன்மாவில் இரண்டறக் கலந்து வாழ்பவர்கள் நாங்கள். அப்படிப்பட்ட புனிதத் தீயில் ஸ்தூல சரீரத்தைப் போட்டு புனிதமான அக்கினியைக் கெடுக்க விரும்பவில்லை என்றார் பார்சிக்கார முதியவர் !

தேசங்கள் தோறும் பாஷைகள் வேறு ! ஆனால் பண்பாடு மட்டும் கிட்டதட்ட நம் இந்து மதத்தின் பண்பாட்டினை அடியொற்றியே அமைந்து வந்திருக்கிறது. மைசூர்க்காரர்கள்- லிங்கத்தை வழிபவர்கள் அவர்கள் இறந்தவர்களின் சடலங்களை எரிக்க மாட்டார்கள்! புதைத்து விடுவார்கள்.

**எதிர்காலத்தை உருவாக்குகிறவர்களுக்கு எடுத்துச் சொல்ல வேண்டிய பணிகள்!**


விடியுமுன் எழுந்து யோகாசனம் செய்து உடலைத் தூய்மைப்படுத்திக் கொள்ள வேண்டும். நாமாவளி சொல்லி, உள்ளத்தைத் தூய்மைப்படுத்திக் கொள்ள வேண்டும் ! நீதி போதனைகளை, வரலாற்றுச் சம்பவங்களைக் கேட்டு ஆன்மாவைத் தூய்மைப்படுத்த வேண்டும்! ஆலயங்களுக்குச் சென்று இறைவனை வழிபட்டு முன்னோர்களின் முயற்சியினை வியந்து, எண்ணத்தைத் தூய்மைப்படுத்த வேண்டும்.

ஒருவரோடு ஒருவர் கலந்து பேசி, தீய எண்ணங்களை விட்டு, ஆன்மிகத் துறையில் பற்று ஏற்படுத்திக் கொள்ள வேண்டும்.

(தொடரும்)

# அனுக்கிரஹ பாஷணம்

## பூஜ்யஸ்ரீ சங்கர விஜயேந்த்ர ஸரஸ்வதி சங்கராசார்ய ஸ்வாமிகள்



# அனுக்ரஹபாஷணம்

குருர் ப்ரஹ்மா குருர் விஷ்ணு
குருர் தேவோ மஹேஸ்வர: ।
குரூர் ஸாக்ஷாத் பரம்ப்ரஹ்ம தஸ்மை ஸ்ரீ குரவே நம: ।।

ஸ்ருதி ஸ்ம்ருதி புராணாநாம் ஆலயம் கருணாலயம் ।
நமாமி பகவத்பாத பாங்கரம் லோக சங்கரம் ।।

அபாரகருணாஸிந்தும் ஜ்ஞாநதம் சாந்த ரூபிணம் ।
ஸ்ரீ சந்த்ரசேகர குரும் ப்ரணமாமி முதாந்வஹம் ।।

''**வேதோऽகிலோ தர்மமூலம்**'' எனப் பிரசித்தமான வாக்கியம் கூறுகிறது. இந்த உலகில் தர்மமே அடிப்படை. உலகத்தில் பலவிதமான மனிதர்களும், பலவிதமான ஜீவராசிகளும் வாழ்கின்றன. ஒவ்வொரு ஜீவராசிக்கும் தனித்தனி சக்தி, தனித்தனி இயல்பு உண்டு. சிலருக்கு பேசும் திறன் சிறப்பு; சிலருக்கு ஓடும் திறன்; சிலருக்கு

சிந்திக்கும் திறன்; சிலருக்கு எழுத்துத் திறன்; சிலருக்கு இவை அனைத்தும் ஒருங்கே அமைகின்றன.

அதேபோல், ஒவ்வொருவருக்கும் தனித்தனி விருப்பங்களும் உள்ளன. சிலருக்கு கோவில் தரிசனம் பிடிக்கும்; சிலருக்கு இசை கேட்பது விருப்பம்; சிலருக்கு பிரதக்ஷிணம் செய்ய விருப்பம்; சிலருக்கு அமைதியாக அமர்ந்து ஜபம் செய்வது இன்பம் தரும். ''ருசி'' எனப்படுவது மிகவும் விசித்திரமானது. அது ஒவ்வொருவருக்கும் வேறுபடும்; ஒரே நபருக்கே காலத்தின்படி மாறும்.

இவ்வாறான பல்வேறு வேறுபாடுகள் கொண்ட உலகம் நன்றாக நடைபெற வேண்டுமெனில், எல்லோருக்கும் சாந்தி, சௌகரியம், ஒற்றுமை, ஒழுக்கம் நிலை நிறுத்தப்பட வேண்டும். அனைவரையும் ஒன்றிணைக்கும் ஒரு உயர்ந்த தத்துவம் அவசியம். அது ''நல்லது'' ஆக இருக்க வேண்டும். ஆனால் ''நல்லது'' என்றால் என்ன?

நமக்கு நன்மை தருவதோடு, பிறருக்கு துன்பம் தராதது தான் உண்மையான நல்லது. இதுவே தர்மம். அந்த தர்மத்தையே வால்மீகி இராமாயணம் ஆரம்பத்தில் விளக்குகிறது.

மூன்று உலகங்களையும் (பாதாளம், பூலோகம், சுவர்கம்) அறிந்தவர் நாரத மகரிஷி. உலகில் யார் தர்மத்தை உணர்ந்தவர்? யார் தர்மத்தை நடத்துகிறவர்? யாரை முன் உதாரணமாக எடுத்துக் கொள்ளலாம்? என்ற கேள்விக்கு விடை அறிய, அவரிடம் வால்மீகி முனிவர் கேட்கிறார்.

**நாரதர் தகுதியான மனிதரின் குணங்களை வரிசைப்படுத்துகிறார்:-**

தியாகம், சத்தியம், தைரியம், பொறுமை, மனஒழுக்கு, பரிவு போன்ற உயர்ந்த குணங்கள் அனைத்தும் ஒருங்கே உடையவர் யார்?

**''த்யாகேன ஸம:, சத்யே தர்மயுவா,**
**ஷமயா ப்ரிதிவீஸம:, தைர்யே ஹிமவான் இவ''**

இவ்வளவு குணங்களும் ஒரே மனிதனில் நிறைந்திருக்கிறதா? என்ற கேள்விக்கு, நாரதர் ஒரே பதில் தருகிறார். அவர் ஸ்ரீ ராமர். அந்த ஸ்ரீ ராமரின் வாழ்க்கை வரலாறே இராமாயணம். அது வேதத்தின் சாரமாகும்:

**''வேத஽ ப்ராசேதஸாதாசீத் ஸாக்ஷாத் ராமாயணாத்மனா''**

வேதத்தின் ஆழமான தத்துவங்களை எளிமையான சுலோகங்களிலும், இனிய கதையாகவும் வழங்குவது இராமாயணம். அதனால், அதை கேட்பவர்களும், படிப்பவர்களும் ஆனந்தம் அடைகின்றனர். ராம நாமம் ஜபிப்பதாலும், இராமாயணத்தை

பாடுவதாலும், மனம் பரிசுத்தம் அடைகிறது. ஸ்ரீ ராமர் எல்லோருக்கும் நன்மை செய்தவர். ஆகையால், அவர் காலத்தில் மக்கள் அனைவரும் ''ராமா, ராமா'' என்று அவரை கொண்டாடினர்.

வேதமே தர்மத்தின் ஆதாரம். அந்த வேதங்களைப் படிக்கும் பாக்கியம் உங்களுக்கு கிடைத்துள்ளது. அக்ஷய திருதியை போன்ற புண்ணிய நாளில் தானம் செய்வதின் முக்கியத்துவம் கூறப்படுகிறது. சங்கர ஜயந்தி நாளில், இந்த வேதாத்யயனப் பரம்பரையை உலகில் நிலைநிறுத்திய ஆச்சாரியரை நினைவு கூர்கிறோம்.

இன்றைய உலகில் பல தர்மச் செயல்கள் நடைபெறுகின்றன. கோவில் உற்சவங்கள், ஹோமங்கள், நாம சங்கீர்த்தனம், கோசாலை, பூஜைகள் போன்றவை. இவை அனைத்தும் மனசாந்தி அளித்து, நல்ல பழக்கங்களை உருவாக்குகின்றன.

**''ஆசாரஹீனம் ந புனந்தி வேதா:''** - ஆசாரமின்றி வேதபடிப்பு பலன் தராது. ஆகவே, வேதாத்யயனம் என்பது வெறும் கல்வி அல்ல; அது ஒழுக்கம், பக்தி, குருபக்தி, நித்யகர்மா ஆகியவற்றுடன் இணைந்த முழுமையான வாழ்க்கை முறையாகும்.

காயத்ரி ஜபம், அர்க்ய பிரதானம், சமிதாதானம் போன்ற நித்ய கர்மாக்கள் மூலம் ஆன்மீக முன்னேற்றம் கிடைக்கிறது. மேலும், வேத மந்திரங்களின் மூலம் உலக நலனுக்காக பிரார்த்தனை செய்வது மிக உயர்ந்த சமூக சேவையாகும்.

வேதம் ஒரு மகா மரம் போன்றது; அதில் எண்ணற்ற பலன்கள் உள்ளன. அதை முறையாக கற்று, பிறருக்கும் பயன் அளிப்பது பெரிய புண்ணியம். உபநயனம், விவாகம் போன்ற கர்மாக்களில் மந்திரங்களின் மூலம் உலகிற்கு சேவை செய்யும் வாய்ப்பு உங்களுக்கு உள்ளது.

சமஸ்கிருதம் இந்த வேத பாரம்பரியத்தில் முக்கியமானது. அதை அறிந்தால், சாஸ்திரங்களை ஆழமாகப் புரிந்து கொள்ளலாம். மேலும், வேதம், சாஸ்திரம், ஆகமம் ஆகிய துறைகளில் மேம்பட வாய்ப்பு கிடைக்கும்.

இன்றைய காலத்திலும் வேதபாடசாலைகள், ஆகமபாடசாலைகள், தர்மப்ரசார அமைப்புகள் மூலம் இந்தப் பாரம்பரியம் வளர்ந்து வருகிறது. இவை அனைத்தும் சமுதாய நலனுக்காக செயல்படுகின்றன. நீங்கள் செய்யும் வேத சேவை, தேச சேவையாகும். இந்த தர்மத்தை பாதுகாக்கும் பணியில் நீங்கள் மேலும் உற்சாகத்துடன் முன்னேற வேண்டும்.

**''தர்மோ ரக்ஷதி ரக்ஷித:'' - தர்மத்தை காக்கும் மனிதனை தர்மமே காக்கும்.**

**ஹர ஹர நம: பார்வதி பதயே ஹர ஹர மகாதேவா**

# 7. ஸ்ரீ ஸூத ஸம்ஹிதை என்று அழைக்கப்படும் ஶ்ருதி ஸம்ஹிதையின் தமிழ் விளக்கவுரை.

*ஸு. ஸுதர்ஶன கனபாடிகள்*
மதுரை

## ४) ईश्वरपूजा विधानम् 4. ஈஶ்வர பூஜா விதானம்

நைமிஷாரண்ய மஹர்ஷிகள் ஸூதரிடம் ஶிவ பூஜை செய்யும் முறையை கேட்டனர் .

**ஸூதர் :** வேதங்களிலும், ஸ்ம்ருதிகளிலும் சொன்ன ப்ராதஸ்னானம், ஸந்த்யா வந்தனம், அக்னி உபாஸனை, மாத்யாஹ்னிகம், ப்ரஹ்ம யக்ஞம், தேவர்ஷிதர்ப்பணம் முதலியவைகளை ஶ்ரத்தையோடு செய்து (பூஜையின் அங்கமாக வாருண (ஜல) ஸ்னானம் செய்து இருந்தாலும் பஸ்ம ஸ்னானம் செய்து) ஸமமான இடத்தை பசுஞ் சாணத்தால் ஶுத்தம் செய்து மௌனமாக எவ்வித விசாரமும் க்லேஶமும் இல்லாமல் (1). வடக்கு முகமாக உட்கார்ந்து ஸங்கல்பம், கலஶபூஜை செய்து நன்கு அலங்காரம் செய்து (ஆதார ஶக்தி, ஆதி கூர்ம முதல் பரதத்வாஸனம் முடிய பூஜை செய்யப்பட்ட) விசித்திரமான அழகான பீடத்தில் (2). ஆகஸ்த்ய ஶாஸ்த்ரத்தில் சொல்லப்பட்ட ஶிவ லிங்கத்தை ப்ரதிஷ்டை செய்து ஶாந்தமாகவும் ஶ்ரத்தையுடனும் ஹ்ருதாகாஶத்தில் உள்ள பரமேஶ்வரரை ப்ரணவ மந்த்ரத்தால் லிங்கத்தில் ஆவாஹனம் செய்து முத்ரைகளால் கலையை ஸ்திரப்படுத்தி ப்ரணவத்துடன் கூடிய பஞ்சாக்ஷர மந்த்ரத்தால் அர்க்யம், பாத்யம், ஆசமனம், மதுபர்க்கம், முதலிய உபசாரங்கள் செய்து ஆபோஹிஷ்டாதி மூன்று மந்த்ரங்களாலும், (3). புருஷ ஸூக்தத்தாலும், பஞ்சாக்ஷரத்தாலும், ருத்ராதி ஜபங்களாலும் அபிஷேகம் செய்து, மறுபடியும் ஆசமனம் கொடுத்து, ஆஸனத்தில் வைத்து, வஸ்த்ரம், யக்ஞோபவீதம், ருத்ராக்ஷம், ஆபரணங்கள், கந்தம், விபூதி இவைகளை அணிவித்து தூபதீபம் காண்பித்து, ஹவிஸ், பழங்கள் முதலியவைகளோடு ஜலமும் நிவேதனம் செய்து ஆசமனம் கொடுத்து லவங்கம் முதலிய வாசனை த்ரவ்யங்களுடன் சேர்த்த தாம்பூலத்தை ஸமர்பித்து, நீராஜனம், மந்த்ரபுஷ்பம் முதலிய உபசாரங்கள் மற்றும் ப்ரதக்ஷிண நமஸ்காரம் செய்து வேத மந்த்ரங்களாலும், ஸ்தோத்ரங்களாலும் ஸ்துதித்து ப்ரணவ மந்த்ரத்தால் மறுபடியும் தன்னுடைய ஹ்ருதயகமலத்தில் விஸர்ஜனம் செய்ய வேண்டும். இது மாதிரி ப்ரதி தினம் அம்பிகாபதியாக பரமேஶ்வரரை ப்ரஹ்மசாரீ, க்ருஹஸ்தன், வனஸ்தன்,

நைஷ்டிகாதி வ்ரதங்களில் உள்ளவர், ஸந்யாஸீ என்று அனைவரும் பூஜிக்க வேண்டும். (4). ஸந்யாஸீ ப்ரணவத்தினால் மட்டுமே பூஜிக்க வேண்டும். ஸ்தீரீகள் ஸ்படிகம் தவிர்த்த ஶிவலிங்கத்தை ஶிவாயநம: என்ற மந்த்ரத்தினால் தான் பூஜிக்க வேண்டும்.

संन्यासी देवदेवेशं प्रणवेनैव पूजयेत् ।
नमोन्तेन शिवेनैव स्त्रीणां पूजा विधीयते ।।

பூஜையில் அதிகாரம் இல்லாதவர்கள் தேவாலயத்தை தரிஶித்து நமஸ்கரித்தாலே பூஜை செய்த பலன் கிடைக்கும். இப்படியாக செய்யப்படும் பூஜையால் போகமும் மோக்ஷமும் அவரவர் விருப்பப்படி கிடைக்கும்.

**இங்கு சிறிது விசாரனை செய்வோம்.**

1) **வடக்கு முகமாக :** பொதுவாக ஶுப செயல்களை கிழக்கு அல்லது வடக்கு முகமாக அமர்ந்து செய்ய வேண்டும். ஆனால் ஶிவனின் கிழக்கு திக்கில் நந்தி இருப்பதாலும் ஶிவனுக்கு வடக்கே அம்பாள் இருப்பதாலும் ஶிவனுடைய பின்புறம் பூஜை செய்யக் கூடாததாலும் ஶிவனுக்கு தெற்கில் அமர்ந்து ஈஶ்வர பூஜையை வடக்கு முகமாக தான் செய்ய வேண்டும்.

न प्राच्यामग्रतः शम्भोर्नोत्तरे योषिदाश्रये ।
न प्रतीच्यां यतः पृष्ठं तस्माद्दक्षं समाश्रयेत् ।।

2) **ஆகஸ்த்ய ஶாஸ்த்ரம் :** அகஸ்த்யரால் சொல்லப்பட்ட ஆகம லக்ஷணம். ஸ்திர லிங்கம், சரலிங்கம் என்று ஶிவலிங்கம் இருவகைப்படும். (இதன் விவரங்களை அடுத்த மாத கட்டுரையில் காண்போம் )

3). (மஹாவிஷ்ணு ஸம்பந்தமாக நாம் நினைக்கும்) புருஷஸூக்தம் பரமேஶ்வர பூஜையில் எப்படி என்ற கேள்வி ஸாதாரணமாக எழும். புருஷ ஸூக்தம் விராட் புருஷனுடைய ஸூக்தம் (இங்கு பரமேஶ்வரர் விராட் புருஷராக உள்ளார் அதனால் தான் ருத்ராதி ஜபங்களைக் காட்டிலும் புருஷ ஸூக்தத்திற்கு இங்கு முக்யத்வம் கொடுக்கப்பட்டு இருக்கிறது .

पुनः स्नाप्य महादेवमापोहिष्ठादिभिस्त्रिभिः ।
तथा पुरुषसूक्तेन श्रीपत्पञ्चाक्षरेण च ।।

(இங்கு ச என்ற பதத்திற்கு ஏனைய ருத்ரம் முதலிய மந்திரங்கள் என்று வ்யாக்யானம் செய்யப்பட்டுள்ளது.)

4) ஸந்யாஸீ ப்ரணவத்தால் மட்டுமே பரமேஶ்வரரை பூஜிக்க வேண்டும் என்று இங்கு கூறியதற்கு காரணம் இது வேதாந்த க்ரந்தம். மற்றும் ஸந்யாஸ ஆஶ்ரம ஸ்வீகாரம் செய்யும் பொழுது வேதஸாரமான காயத்ரீ மந்த்ரத்தை வ்யாஹ்ருதியின் உள்நுழைத்து விடுவர். பிறகு வ்யாஹ்ருதியை ப்ரணவத்தின் உள்நுழைத்து விடுவர். ஆதலால் தான் ஸந்யாஸிகளுக்கு பிற மந்த்ரங்களைக் காட்டிலும் ப்ரணவ ஜபம் மிக முக்யமானது என்று உபநிஷத் முதலான க்ரந்தங்களில் கூறப்படுகிறது.

**यः प्रणवमधीते स सर्वमधीते ,**

**एतद्वै यजुस्त्रयीं विद्यां प्रत्येषावागेतत्परममक्षरम् (श्रुतिः)**

(தொடரும்)




ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதி

ஜகத்குரு ஸ்ரீ சங்கராச்சார்ய ஸ்வாமிகள்

ஸ்ரீமடம் ஸம்ஸ்தானம்,

நெ. 1, சாலைத்தெரு, காஞ்சிபுரம்- 631 502.

web : www.kamakoti.org Email : kanchiacct@gmail.com

☎ : 044-27222115
Cell : 9445421115



**கைங்கர்யங்கள்**

| ஸம்வத்வர சேவா கைங்கர்யங்கள் | ஒருமுறை | ஒரு வருடம் | நிரந்தர வைப்பு |
|---|---|---|---|
| அனுஷ பூஜை (ப்ரதி மாதம் அனுஷத்தன்று) | 1,000 | 15,000 | 2,00,000 |
| அவிட்டம் பூஜை ( ப்ரதி மாதம் அவிட்டத்தன்று) | 1,000 | 15,000 | 2,00,000 |
| ப்ரதோஷ பூஜை | | 1,000 | 10,000 |
| பௌர்ணமி பூஜை | | 500 | 5,000 |
| **மற்ற சேவா கைங்கர்யங்கள்** | | **ஒருமுறை** | **நிரந்தர வைப்பு** |
| நித்ய வேத பாராயணம் | | 5,000 | 50,000 |
| நித்ய அன்னதானம் | | 5,000 | 50,000 |
| கோ சம்ரக்ஷணம் | | 5,000 | 1,00,000 |
| வேத பாடசாலை | | 5,000 | 50,000 |
| அகண்ட நெய் தீப சேவை | | 5,000 | 1,00,000 |

Online Transfer Details for doing Contribution towards above mentioned Pooja Kainkaryams

Account Name : **SRI K.K.P.SANKARACHARYA SWAMIGAL SRIMATAM SAMSTHANAM**

BANK NAME & BRANCH : **Indian Bank, Sankara Mutt Branch, Kanchipuram**

SB A/C No : **411550436** IFS Code : **IDIB000S085**

Kindly Intimate your contribution details Viz: Name, Address, Mobile Number, E-Mail ID, Amount Transferred, Seva Name (for which you are contributing), Transaction Reference No/UTR No. to : **kanchiacct@gmail.com** to enable us to send you receipt and prasadam.

**Online Contribution can be made through E-Seva Portal - www.kanchimuttseva.org**

# அநுகீதாபர்வம்

அநுகீதாபர்வம் (தொடர்ச்சி.)

## முப்பத்தோராவது அத்யாயம்.

(பரசுராமருடைய பித்ருக்கள் அவருக்கு அலர்ச்சன் கதையைக் கூறியதும், அவர் க்ஷத்திரிய வதத்தை விட்டதும்.)

பிராம்மண ஸ்ரேஷ்டனே! இந்த விஷயத்திலும் புராதனமான இந்த இதிஹாஸத்தை உதாஹரிக்கின்றனர். நீ இதனைக் கேட்டு அவ்விதம் செய்ய வேண்டும். மிகச் சிறந்த தவமுள்ளவனும், தர்மங்களை அறிந்தவனும், ஸத்தியவாதியும், மஹாத்மாவும் மிக்க உறுதியான வ்ரதம் உள்ளவனுமான அலர்க்கனென்னும் ராஜரிஷி ஒருவன் இருந்தான். அவன் ஸமுத்திரம் சூழ்ந்த இந்த பூமியை வில்லினால் ஜயித்துச் செய்தற்கு அருமையான காரியத்தைச் செய்து மோக்ஷத்தில் மனத்தைச் செலுத்தினான்.

சிறந்த புத்தியுள்ளவனே! பிறகு, மிகப்பெரிய ராஜ்யத்தை விட்டு மரத்தின் அடியில் இருக்கும் அந்த அலர்க்கனுக்கு ஸூக்ஷ்மமான பிரம்மத்தைப் பற்றிய ஆலோசனை உண்டாயிற்று. அவன், என்னுடைய மனத்திற்குப் பலம் உண்டாயிருக்கிறது. மனத்தை ஜயித்தால் ஜயம் நிச்சயம். பகைவர்களால் சூழப்பட்ட நான் (வெளியிலுள்ள பகைவர்களைவிட) வேறானவர்களிடம் பாணங்களைப் பிரயோகிக்கப் போகிறேன். எல்லா மனிதர்களையும் ஆசையினால் கர்மாவைச் செய்யும்படி செய்கிற இந்த மனத்தைக் குறித்து நான் மிகக் கூர்மையான முனையுள்ள பாணங்களைப் பிரயோகிக்கப் போகிறேன் என்று சொன்னான்.

மனம் அலர்க்க ! இந்தப் பாணங்கள் என்னை எவ்விதத்திலும் மீறமாட்டா. உன்னுடைய உயிர் நிலைகளையே பிளக்கும். நீ மர்மம் பிளக்கப்பட்டவனாகி மரிக்கப் போகிறாய். (ஆகையால்) நீ என்னை கொல்லக் கூடிய வேறு பாணங்களைப் பார் என்று சொல்லிற்று அந்த அலர்க்கன் அதைக் கேட்டு ஆலோசித்து, பிறகு, க்ராணமானது பலவிதமான வாஸனைகளை மோந்து அவைகளைப் பற்றியே ஆசைப்படுகிறது. ஆகையால், நான் க்ராணத்தின் மீது கூர்மையுள்ள பாணங்களைப் பிரயோகிக்கப் போகிறேன் என்று சொன்னான்.

க்ராணம், அலர்க்க! இந்தப் பாணங்கள் என்னை எவ்விதத்திலும் மீறமாட்டா. உன்னுடைய மர்மத்தையே பிளக்கப் போகின்றன. நீ மர்மம் பிளக்கப்பட்டு மரிக்கப்

போகிறாய். என்னைக் கொல்லக்கூடிய வேறு பாணங்களைப் பார் என்று சொல்லிற்று. அந்த அலர்க்கன் அதைக் கேட்டு ஆலோசித்து, பிறகு, இந்த நாவானது ருசியுள்ள ரஸங்களைப் புஜித்து (பிறகும்) அவைகளையே விரும்புகிறது. ஆகையால், நான் நாவைக் குறித்துக் கூர்மையுள்ள கணைகளைத் தொடுக்கப் போகிறேன் என்று சொன்னான்.

நா, அலர்க்க.! இந்தப் பாணங்கள் என்னை எவ்விதத்திலும் மீறமாட்டா. உன்னுடைய உயிர் நிலையையே பிளக்கப் போகின்றன. பிறகு, உயிரை இழக்கப் போகிறாய். நீ என்னைக் கொல்லக் கூடிய வேறு பாணங்களைப் பார்' என்று சொல்லிற்று. அந்த அலர்க்கன் அதைக் கேட்டு ஆலோசித்து, பிறகு, துவக்கானது பலவித ஸ்பர்சங்கங்களை அனுவித்து (மறுபடியும்) அவைகளையே விரும்புகிறது.

ஆகையினால், துவக்கைக் கழுகிறகு பூண்ட பலவிதமான பாணங்களால் பிளக்கப் போகிறேன் என்ற வசனத்தைச் சொன்னான். துவக்கு, அலர்க்கா! இந்தப் பாணங்கள் என்னை எவ்விதத்திலும் மீறமாட்டா. உன்னுடைய மர்மத்தையே பிளக்கப் போகின்றன. நீ மர்மம் பிளக்கப்பட்டு மரிக்கப் போகிறாய். நீ என்னைக் கொல்லக்கூடிய வேறு பாணங்களைப் பார் என்று சொல்லிற்று. அந்த அலர்க்கன் அதைக் கேட்டு ஆலோசித்துப் பிறகு, காதானது பலவித சப்தங்களைக் கேட்டு (மறுபடியும்) அவற்றையே விரும்புகிறது.

ஆகையால், நான் ஸ்ரோத்ரத்தைக் குறித்துக் கூர்மையுள்ள பாணங்களைப் பிரயோகிக்கிறேன் என்ற வசனத்தைச் சொன்னான். ஸ்ரோத்ரம், அலர்க்க! இந்தப் பாணங்கள் என்னை எவ்விதத்திலும் மீறமாட்டா. உன்னுடைய மர்மத்தையே பிளக்கப் போகின்றன. பிறகு, உயிரை இழக்கப் போகிறாய். நீ என்னைக் கொல்லக் கூடிய வேறு பாணங்களைப் பார் என்று சொல்லிற்று.

(தொடரும்)

- எல்லோரும் தம்மை விட்டு விட்டு வேறு யாரையோ சீர்திருத்த முயலுகிறார்கள். எல்லாத் துன்பங்களுக்கும் இரண்டு மருந்துகள் உள்ளன. ஒன்று காலம், இன்னொன்று மௌனம். முன்நோக்கி செல்லும் போது கனிவாயிரு. ஒருவேளை பின்நோக்கி வரநேரிட்டால் யாராவது உதவுவார்கள்.

பகவான் க்ருஷ்ணர்

# சிவனடியார்கள் சரித்திரம்

*கலை ராம வெங்கடேசன்*

## 5. விறன்மிண்ட நாயனார்

சேரநாட்டின் செங்குன்றூர் என்னும் ஊர் மலைப் பாங்கானப் பகுதியில் இருந்த மிகவும் செழிப்பான சிறிய கிராமம் ஆகும். சீற்றமுறும் கடலால் கரையில் ஒதுக்கப் பெறும் ஒளி வீசுகின்ற முத்துக்களைப் போன்ற அழகான பல் வரிசைகளை உடைய இளம் மங்கைகள் வாழக் கூடிய பெருமைமிக்கதாக இச்சிற்றூர் திகழ்ந்தது.

இவ்வழகிய ஊரில் உலகப் பற்றுக்களை எல்லாம் துறந்து சிவபெருமானது கழல்களையே பற்றி, பரிவுடன் தொண்டு செய்பவராய் வேளாள குலத்தைச் சேர்ந்த விறன்மிண்டர் என்பவர் வாழ்ந்து வந்தார். சிவபெருமான் எழுந்தருளி இருக்கும் பல திருத்தலங்களுக்கும் சென்று வழிபட்டு, இறுதியாக திருவாரூரில் சிவனடியார்கள் ஒன்றுகூடி இறைவனைத் தொழுதேத்தும் இடமான ஆயிரம் தூண்களை உடைய தேவாசிரிய மண்டபத்தை அடைந்து அடியார்களுடன் வாழ்ந்து வந்தார்.

திருவாரூர் கோயிலினுள் செல்பவர்கள் முதலில் இச்சிவனடியார்களை வணங்கி விட்டுத்தான் இறைவனை வணங்க உள்ளே செல்ல வேண்டும் என்பது மரபு. இதனை அறியாது ஒருநாள் அவ்வழியேச் சென்ற சுந்தரர் இறைவனது புகழ்பாடும் அடியார்களை வணங்காமல் தியாகராசப் பெருமானை வணங்க நேராகக் கருவறைக்குள் சென்று விட்டார். சிவனடியார்களின் திருக்கூட்டத்தைச் சுந்தரர் மதிக்காமல் சிறுமைப்படுத்தி விட்டதாகக் கருதி வெகுண்ட விறன்மிண்டர், சுந்தரரையும் அவரைத் தடுத்தாட் கொண்ட சிவபெருமானையும் அடியார்க் கூட்டத்தில் இருந்து விலக்கி வைப்பதாக அறிவித்தார்.

குறிக்கோளை நோக்கிச் சென்ற தம் முன்னர் எந்தத் தடை வந்தாலும் அதனைப் பொருட்படுத்தாது கொள்கையை நிலைநிறுத்தி வாழ்ந்தவரிடம் இறைவனே வந்து இக்கொள்கையை விட்டு விடுக என்று கூறினாலும் இறைவனே வேண்டாம் என்று கூறி தம் கொள்கையை நிலைநிறுத்த முற்பட்டவர் விறன்மிண்டர்.

கோபக்கனல் பொங்க தன்னைத் தண்டித்த விறன்மிண்டரை ஆழ்ந்த அமைதியுடன் நோக்கிய சுந்தரர் சிவனடியார்களின் அபராதத்திற்கும், கோபத்திற்கும் ஆளாகும் எண்ணம் எள்ளளவும் தனக்கு இல்லை என்பதைத் தெளிவுபடுத்தினார். விண்ணை

முட்டும் பெருமையுடைய அடியார்த் திருக்கூட்டத்தில் சேர்ந்திருக்க தான் தகுதியற்றவன் என்பதை உணர்ந்து வருந்தியபடி விலகிச் சென்றார். தான் என்றும் மகிழ்வுடன் உறைவது அடியார்களுடனே ஆகும் என்பதை சிவபெருமான் சுந்தரருக்கு உணர்த்தி குன்றனைய சிறப்பு வாய்ந்த அடியார்களின் பெருமையினைப் பாடுமாறு சுந்தரருக்கு அருளாணை இட்டார்.

இறைவன் தாள் பணிந்து வணங்கிய சுந்தரர் திருத் தொண்டத் தொகை என்னும் பாமாலையைப் பாடி சிவனடியார்க்குகந்த அடியார்களுக்குச் சமர்ப்பித்தார். தேவாசிரிய மண்டபத்தில் கூடியிருந்த திருக் கூட்டத்தினர் சுந்தரரின் பக்திமணம் கமழும் பாமாலையைப் போற்றினர். எனவே சிவனடியார்களின் வரலாற்றினைப் பாடும் சேக்கிழாரின் பெரியபுராணம் என்னும் காவியம் உருவாகக் காரணமாக இருந்தவர் விறன்மிண்டர் என்றே கூறலாம். இக்காவியம் விறன்மிண்டருக்கு தான் கொண்ட கொள்கையில் இருந்த அர்ப்பணிப்பு உணர்வுக்கும் சுந்தரர் அடியாரிடத்தில் சரண் புகுந்த தன்மைக்கும் சான்றாக அமைந்துள்ளது. கொள்கையினால் உயர்ந்து இறைவனுடன் இரண்டறக் கலந்த விறன்மிண்டரை அறுபத்து மூன்று நாயன்மார்களில் ஒருவராகச் சிவாலயங்களில் வைத்து நாம் போற்றி வணங்கி வழிபாடு செய்கிறோம்.

(தொடரும்)

ஜய ஜய சங்கர உ ஹர ஹர சங்கர

ஸ்ரீ

தர்மோ ரக்ஷதி ரக்ஷித:

## ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடம்

சீடர்களின் கவனத்திற்கு

**ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடம் ஜகத்குரு ஸ்ரீ சங்கராச்சார்ய ஸ்வாமிகளின்**

சீடர்களாகிய நாம் நமது குடும்பத்தில் அவ்வப்பொழுது நடைபெறும் சுபநிகழ்ச்சிகளுக்கு பத்திரிகைகள் தயார் செய்யும்போது கீழ்க்கண்ட வாசகங்களை முதலில் அமைப்பது சாலச் சிறந்ததாகும்.

**"ஸ்ரீ மஹா த்ரிபுரசுந்தரி ஸமேத ஸ்ரீ சந்திர மௌலீஸ்வர ஸ்வாமி க்ருபையுடன், ஸ்ரீ ஆதிசங்கர பகவத்பாதாள் பரம்பராகத மூலாம்நாய ஸர்வக்ஞபீடம் ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதி ஜகத்குரு ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ சங்கராச்சார்ய ஸ்வாமிகள் பரிபூரண அனுக்ரஹத்துடன்**

# ஸ்ரீ அமரநாத மாஹாத்மியம்

## முக்கிய அம்சங்கள்

### பி. ஆர். கண்ணன்

**இமம் மே கங்கே யமுநே ஸரஸ்வதி ஶுதுத்ரி ஸ்தோமம் ஸசதா பருஷ்ண்யா ।**

**அஸிக்ந்யா மருத்வ்ருதே விதஸ்தயார்ஜீகீயே ஶ்ருணுஹ்யா ஸுஷோமயா ॥**
(ரிக்வேதம், அஷ்டகம் 8, நதி ஸ்துதி ஸூக்தம்)

யாத்திரையை முறையாக செய்து அமரநாதரை தரிசிப்பவன் சிவஸாயுஜ்யத்தை அடைவான் என்று கூறப்படுகிறது.

**ஏவம்க்ருத்வா நரோ யாத்ராம் பஶ்யேல்லிங்கம் ரஸாத்மகம் ।**
**ஸ யாதி ஶிவஸாயுஜ்யம் யத்ர நாஸ்தி க்ருதாக்ருதம் ॥ (1.26)**

இங்கு லிங்கம் ''ரஸாத்மக லிங்கம்'' என்று அழைக்கப்படுகிறது - அதாவது நீரால் ஆன லிங்கம். திருவானைக்காவல் (கஜாரண்யம்) மாகாத்மியத்தில் அகிலாண்டேஸ்வரி தன் கரங்களால் நீரால் ஜம்புகேஸ்வர லிங்கத்தை உருவாக்கி வழிபட்ட நிகழ்வை இங்கு நினைவு கூறலாம்.

ஸ்லோகம் 1.26-ல் சிவஸாயுஜ்ய நிலை என்பது 'க்ருத' (செய்யப்பட்ட செயல்) மற்றும் 'அக்ருத' (செய்யப்படாத செயல்) ஆகிய இரண்டும் இல்லாத நிலை என்று கூறப்படுகிறது. செய்ய வேண்டியது, செய்யக் கூடாதது என்ற ஒழுக்க விதிகள் சாதாரண மனித வாழ்க்கைக்கே பொருந்தும். ஆனால், இந்திரியங்களையும் மனதையும் வென்று ஞானம் உதித்த நிலையிலுள்ள ஒருவர் வாழ்க்கையின் இருமை நிலைகளைத் தாண்டி உயர்கிறார். அவருக்கு செய்ய வேண்டிய செயலும் இல்லை; செய்யக்கூடாத செயலும் இல்லை. சிவனை நோக்கி பொதுவாக சொல்லப்படும் ஒரு பிரார்த்தனை வருமாறு:

**யத்க்ருத்யம் தந்நக்ருதம், அக்ருத்யம் க்ருத்யவத் யதாசரிதம், உபயோ: ப்ராயஶ்சித்தம் ஶிவ தவ நாம த்ய்யக்ஷரம், ஶிவாய நம : ।**

''செய்ய வேண்டியவற்றை நான் செய்யவில்லை; செய்யக் கூடாதவற்றை செய்ய வேண்டியவை போல செய்து விட்டேன். இரண்டிற்கும் பரிகாரமாக உமது 'சிவ' என்னும் ஈரெழுத்துப் பெயரே போதுமானது; சிவனுக்கு நமஸ்காரம்.''

இப்போது கிடைக்கின்ற அமரநாத மாகாத்மிய வர்ணனை முழுமையானதல்ல எனத் தோன்றுகிறது. ஆகவே அமரநாத குகைக்கு செல்லும் வழியிலுள்ள பல க்ஷேத்திரங்களின் விரிவான விவரங்கள் இதில் இடம்பெறவில்லை. எனினும், முதல் அதிகாரத்தில் அனைத்து க்ஷேத்திரங்களும் தீர்த்தங்களும் பின்வருமாறு பட்டியலிடப்பட்டுள்ளன:

| | |
|---|---|
| 1. சிவபரம் - கங்கை | 2. பத்மபுரம் - மகாநாக தீர்த்தம்; ஹரித்ரா கணபதி வழிபாடு |
| 3. பலிஹர - ஸ்தல தீர்த்தம் | 4. ஹஸ்திகர்ணம் - ஸரஸ்வதி ஆசிரம தீர்த்தம், சக்ரேச தீர்த்தம், தேவக தீர்த்தம், ஹரிச்சந்திர தீர்த்தம் |
| 5. ஸ்தலவாடம் - ம்ருத தீர்த்தம் | 6. சூர்ய குஹாவாடம் - லம்போதரி தீர்த்தம் |
| 7. சூர்யாஸ்ரமம் - சூர்ய கங்கை | 8. கர - ஸ்தல தீர்த்தம்; கணபதி வழிபாடு |
| 9. ஹயசீர்ஷாச்ரமம் - அஸ்வதரநாக தீர்த்தம் | 10. புத்தோரசி - கங்கை |
| 11. ஸரலகம் - ஸ்தல தீர்த்தம் | 12. கில்யாயனம் - நாராயண தீர்த்தம்; விஷ்ணு வழிபாடு |
| 13. மாமலகம் - மாமேச தீர்த்தம்; கணபதி மற்றும் மாமலேஸ்வர லிங்க வழிபாடு | |
| 14. ப்ருகுபதி - நீலகங்கை | 15. ஸ்தாண்வாச்ரமம் - பஞ்சதரங்கிணி |
| 16. கர்பாகாரம் - அமராவதி | |

**கில்யாயனம் :**

ஒரு காலத்தில் பாலகில்ய முனிவர்கள் ஆயிரம் ஆண்டுகள் கடுமையான தவம் செய்தனர்; அவர்கள் ஒரு காலின் பெருவிரல் நுனியில் நின்றபடியே தவம் புரிந்தனர். பாலகில்யர்கள் அறுபதாயிரம் பேர் என்று கூறப்படுகிறது; அவர்கள் பிரம்மாவின் புத்திரர்கள். அவர்கள் எப்போதும் சூரியனின் ரதத்திற்கு முன்னால் இருந்து, மந்தேஹர் எனப்படும் அசுரர்கள் சூரியனைத் தாக்காதபடி அர்க்யம் சமர்ப்பித்து வருகின்றனர். பூமியில் த்விஜர்கள் சந்த்யாவந்தனம் செய்து சரியான நேரத்தில் அர்க்யம் அளிக்காத போது, பகவான் ஏற்படுத்திய அவசர ஏற்பாடுதான் இது !

(தொடரும்)

# ஸ்ரீ மடத்தில் ஆடி மாத விசேஷ தினங்கள்

| தேதி | கிழமை | விவரம் |
|---|---|---|
| 22-07-2026 | புதன் | ஸ்வாதி தேர் ; ஸ்வாதி வேத பாராயணம் |
| 24-07-2026 | வெள்ளி | அனுஷம் தேர் ; அனுஷம் வேத பாராயணம் |
| 25-07-2026 | சனி | ஏகாதசி |
| 26-07-2026 | ஞாயிறு | த்வாதசி ; ப்ரதோஷ பூஜை சாதுர்மாஸ்யாரம்பம் |
| 27-07-2026 | திங்கள் | மூலம் தேர் ; மூலம் வேத பாராயணம் |
| 28-07-2026 | செவ்வாய் | பௌர்ணமீ பூஜை |
| 29-07-2026 | புதன் | வ்யாஸ பூஜா ; குரு பூர்ணிமா ; உத்ராடம் தேர் ; உத்ராடம் வேத பாராயணம் |
| 31-07-2026 | வெள்ளி | ஸ்ரீ காஞ்சி ஸ்ரீ ஜயேந்திர ஸரஸ்வதி ஸ்வாமிகள் ஜயந்தீ அவிட்டம் தேர் ; அவிட்டம் வேத பாராயணம் |
| 03-08-2026 | திங்கள் | ஆடிப்பெருக்கு |
| 07-08-2026 | வெள்ளி | ஆடி க்ருத்திகை |
| 09-08-2026 | ஞாயிறு | ஏகாதசி |
| 10-08-2026 | திங்கள் | த்வாதசி ; ப்ரதோஷ பூஜை |

*17-07-2026 ; 24-07-2026 ; 31-07-2026 07-08-2026 ; 14-08-2026*
வெள்ளிக்கிழமை பூஜை மாலையில் ஸ்ரீமஹாத்ரிபுரசுந்தரி சமேத
ஸ்ரீசந்த்ரமௌளீஸ்வரருக்கு விசேஷ அபிஷேக பூஜை

# முகாம் நிகழ்ச்சிகள்

நிகழ்ச்சிகளின் தொடர்ச்சி

**மே 24 முதல்**
**ஜூன் 20, 2026 வரை**

**மே 24** - நெல்லூரில் நடைபெற்ற புரோஹித்சுமித்ரசுசங்கம் நிகழ்ச்சியில் பூஜ்யஸ்ரீ காஞ்சி சங்கராச்சார்ய ஸ்வாமிகளின் அனுக்ரஹ பாஷணம் அருளப் பெற்றது.



யாத்திரை தகவல்கள் : பூஜ்யஸ்ரீ சங்கராச்சார்ய ஸ்வாமிகள் நேற்று மாலை ஒங்கோல் வந்து அடைந்தார்கள். பின்னர், இன்றைய யாத்திரை திருவள்ளூர் மாவட்டம் பொன்பாடி நோக்கி தொடர்கிறது. மேலும், நாளை (25 மே 2026) மாலை காஞ்சிபுரத்திற்கு திரும்பி அருளவிருக்கின்றார்கள்.

**மே 25** - பல்வேறு ஆன்மீக மற்றும் கலாச்சார நிகழ்வுகளிலும், காளேஸ்வரத்தில் நடைபெற்ற சரஸ்வதி புஷ்கராளு மகோற்ஸவத்திலும் அருளாசி வழங்கி, தெலங்கானா யாத்திரையை நிறைவு செய்து திரும்பிய பூஜ்யஸ்ரீ சங்கர விஜயேந்திர சரஸ்வதி சங்கராச்சார்ய ஸ்வாமிகள் இன்று மாலை (25.05.2026) காஞ்சிபுரத்தை வந்தடைந்தார்கள்.

**மே 28** - பூஜ்யஸ்ரீ விஜயேந்திர சரஸ்வதி ஸ்வாமிகளும், பூஜ்யஸ்ரீ சத்ய சந்திரசேகரேந்திர சரஸ்வதி ஸ்வாமிகளும் சிம்ம வாகனத்தில் அலங்கரித்து எழுந்தருளி இருந்த ஸ்ரீ வரதராஜப் பெருமாளின் உற்சவ மூர்த்தியை தரிசனம் செய்து அருள் பெற்றார்கள்.

இம்மங்களகரமான நிகழ்வு காஞ்சிபுரத்தில் நடைபெற்ற ஸ்ரீ வரதராஜ ஸ்வாமி பிரம்மோத்ஸவத்தின் முதல் நாளைச் சிறப்பித்தது. வேத பண்டிதர்களின் வேதமந்திர முழக்கங்களின் மத்தியில் பூஜ்ய சங்கராச்சார்ய ஸ்வாமிகள் பிரசாதம் சமர்ப்பிக்கப்பட்டது. பக்தர்களும் தெய்வீக சூழலில் ஆனந்தம் அடைந்து தரிசன பாக்கியத்தை பெற்றனர். இன்று மாலை பூஜ்யஸ்ரீ சங்கராச்சார்ய ஸ்வாமிகளால் பிரதோஷ பூஜை நடைபெற்றது.

**மே** 29 - பூஜ்யஸ்ரீ சங்கராச்சார்ய ஸ்வாமிகள், காஞ்சிபுரம் ஏனாத்தூரில் அமைந்துள்ள ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி விஸ்வ மகாவித்யாலயா (SCSVMV) வளாகத்தில் உள்ள சில்ப பாடசாலை பவனத்தை நேற்று (29.05.2026) அருளாசி வழங்கி திறந்து வைத்தார்கள். ஆச்சார்ய ஸ்வாமிகள், சில்ப சாலையின் கண்காட்சி அரங்கு, வகுப்பறைகள், பயிற்சி மையங்கள் உள்ளிட்ட பல்வேறு வசதிகளை பார்வையிட்டு, மாணவர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் அருளாசி வழங்கினார்கள். இந்நிகழ்வு, அவருடைய 44வது சந்நியாச ஸ்வீகார தினத்தின் (கிரிகோரியன் நாட்காட்டியின் படி - 29 மே 1983) மங்களகரமான நாளில் இடம்பெற்றது.

ஆன்விக்ஷிகி மற்றும் சில்ப பாடசாலை - ஜகத்குரு பூஜ்யஸ்ரீ சங்கராச்சார்ய ஸ்வாமிகளால் SCSVMV பல்கலைக்கழகத்தில் திறந்து வைக்கப்பட்டது.

மே 30 - பூஜ்யஸ்ரீ சங்கராச்சார்ய ஸ்வாமிகள், காஞ்சிபுரம் ஏனாத்தூரில் அமைந்துள்ள SCSVMV பல்கலைக்கழக வளாகத்தில் இயங்கும் ஆன்விக்ஷிகி பெண்கள் சட்டப் பள்ளியில் மேம்படுத்தப்பட்ட உள்கட்டமைப்பு மற்றும் டிஜிட்டல் வசதிகளுக்கு நேற்று (29.05.2026) அருளாசி வழங்கி திறந்து வைத்தார்கள்.

ஆச்சார்ய ஸ்வாமிகள், ஸ்மார்ட் வகுப்பறைகள், மூட் கோர்ட் (Moot Court), டிஜிட்டல் ஆய்வகம், கருத்தரங்கு மற்றும் மாநாட்டு அரங்குகள், சட்ட உதவி மையம் உள்ளிட்ட பல்வேறு வசதிகளை பார்வையிட்டு, மாணவர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் ஆசீர்வாதம் வழங்கினார்கள்.

இந்நிகழ்வில் சென்னை உயர்நீதிமன்றத்தின் முன்னாள் தலைமை நீதிபதி நீதியரசர் கே. ஆர். ஸ்ரீராம், சென்னை உயர்நீதிமன்ற நீதியரசர் டாக்டர் அனிதா சுமந்த், கர்நாடக உயர்நீதிமன்ற நீதியரசர் ஸ்ரீ இந்த்ரேஷ், ஆந்திர உயர்நீதிமன்ற நீதியரசர் ஜோதிர்மை பிரதாபா, காஞ்சிபுரம் மாவட்ட நீதித்துறை அதிகாரிகள், பி.எஸ்.இ தலைவர் மற்றும்

நிர்வாக இயக்குநர் ஸ்ரீ சுந்தர்ராமன், கல்வியாளர்கள் மற்றும் ஏராளமான பக்தர்கள் கலந்து கொண்டனர். இறுதியில் பூஜ்யஸ்ரீ சங்கராச்சார்ய ஸ்வாமிகள் அனுக்ரஹ பாஷணம் வழங்கி அருளாசி புரிந்தார்கள்.

**மே 31** – ஜகத்குரு காஞ்சி மகாஸ்வாமிகள் ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி மகாஸ்வாமிகளின் 133வது ஜெயந்தி மகோத்ஸவம், காஞ்சிபுரம் ஸ்ரீமடத்தில் மிகுந்த பக்தி மற்றும் தெய்வீக உணர்வுடன் கொண்டாடப்பட்டது.

2026 மே 31 அன்று, ஜெயந்தி தினத்தின் காலை விஷ்வரூப தரிசனத்துடன் நிகழ்ச்சிகள் தொடங்கின. பூஜ்யஸ்ரீ சங்கர விஜயேந்திர சரஸ்வதி சங்கராச்சார்ய ஸ்வாமிகளும், பூஜ்யஸ்ரீ சத்ய சந்திரசேகரேந்திர சரஸ்வதி ஸ்வாமிகளும் அருள்நிறைந்த சந்நிதியில் அபிஷேகம், விசேஷ பூஜைகள், வேத பாராயணம் மற்றும் வித்வத் சதஸ் நடைபெற்றன. இரு ஸ்வாமிகளும் பிருந்தாவனங்களில் அபிஷேகம் மற்றும் விசேஷ பூஜைகளைச் செய்தார்கள்.

பூஜ்ய ஸ்வாமிகள், அங்கு கூடியிருந்த அறிஞர்களையும், இப்புனித நாளில் ஸ்ரீமடத்திற்கு வருகை தந்த பக்தர்களையும் அருளாசி வழங்கி ஆசீர்வதித்தார்கள். வித்வத் சதஸ் நிறைவடைந்ததைத் தொடர்ந்து பல அறிஞர்கள் கௌரவிக்கப்பட்டனர். பின்னர் பக்தர்களுக்கு அன்னதான பிரசாதம் வழங்கப்பட்டது.

மாலை, காஞ்சி மகாஸ்வாமி ஜெயந்தி-சென்டினேரியன் டிரஸ்ட் ஆண்டு சொற்பொழிவு, பூஜ்யஸ்ரீ சங்கர விஜயேந்திர சரஸ்வதி சங்கராச்சார்ய ஸ்வாமிகள் மற்றும் பூஜ்யஸ்ரீ சத்ய சந்திரசேகரேந்திர சரஸ்வதி சங்கராச்சார்ய ஸ்வாமிகளின் அருளாசியுடன் நடைபெற்றது.

**‘‘ஹம்பி மற்றும் காஞ்சி - நித்தியமான தொடர்பு’’** என்ற தலைப்பில், அநேகுண்டி நரபதி சம்ஸ்தானத்தின் 19வது பரம்பரையைச் சேர்ந்த ஸ்ரீ கிருஷ்ண தேவராயர் சிறப்புரை வழங்கினார்.

காஞ்சி மகாஸ்வாமிகளின் ஜெயந்தி நாளை முன்னிட்டு ஆண்டுதோறும் நடைபெறும் சொற்பொழிவிற்காக, இந்தியாவின் முன்னாள் குடியரசுத் தலைவர் திரு. ஆர். வெங்கட்ராமன் மற்றும் மகாராஷ்டிர மாநில முன்னாள் ஆளுநர் திரு. சி. சுப்பிரமணியம் ஆகியோரின் ஆதரவுடன் இந்த சென்டினேரியன் டிரஸ்ட்

நிறுவப்பட்டது. இந்த அறக்கட்டளை, SCSVMV பல்கலைக் கழகத்தில் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

தமது உரையில் ஸ்ரீ கிருஷ்ண தேவராயர், ஹம்பி-காஞ்சி இடையேயான வரலாற்றுப் பிணைப்பையும், பேரரசர் கிருஷ்ணதேவராயர் காஞ்சி மடத்திற்கு அளித்த தர்மத் தானங்களையும் நினைவு கூர்ந்தார். விஜயநகரப் பேரரசர் கிருஷ்ணதேவராயர், சந்திரசேகர சரஸ்வதியின் சீடரான சதாசிவ சரஸ்வதிக்கு ''**உதயம்பாக்கம்**'' என்ற கிராமத்தை தானமாக வழங்கியதோடு, அவரை ''**பரமஹம்ச பரிவ்ராஜகாச்சார்யர்**'' எனப் போற்றிக் குறிப்பிட்டதையும் எடுத்துரைத்தார். இந்த மங்களகரமான தானம் கிரகண புண்ணிய காலத்தில் வழங்கப்பட்டது.

மேலும், உதயம்பாக்கம் என்பது ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடத்தின் 66வது ஆச்சார்யரின் அவதார ஸ்தலமாகவும் குறிப்பிடப்பட்டது. அதேபோன்று, ஜகத்குரு மகா ஸ்வாமிகள் தங்கள் குடும்பத்தின் மீது அருளிய கருணையையும், காலப் போக்கில் மறைந்து இருந்த சில தொன்மையான மரபுகளை மீண்டும் உயிர்ப்பிக்க அவர்கள் வழங்கிய நுண்ணிய வழிகாட்டுதல்களையும் அவர் பகிர்ந்து கொண்டார்.

நமது நாகரிகத்தின் மேன்மையையும், ஆலயங்கள் ஆன்மீக, பொருளாதார, அறிவுசார் மற்றும் உணர்ச்சி ரீதியாக சமுதாயத்தை வளப்படுத்திய மையங்களாக விளங்கியதையும் விரிவாக எடுத்துரைத்தார். மேலும், ஸ்ரீ விஜயகண்ட கோபாலர், காஞ்சி மட சங்கராச்சார்யருக்கு ''**அம்பிகாபுரம்**'' (தற்போதைய அம்பி - காஞ்சியிலிருந்து சுமார் 8 கி.மீ.) என்ற கிராமத்தை தானமாக அளித்த நிகழ்வையும் நினைவுபடுத்தினார்.

பூஜ்யஸ்ரீ சங்கர விஜயேந்திர சரஸ்வதி சங்கராச்சார்ய ஸ்வாமிகள் தமது அனுக்ரஹ பாஷணத்தில், அநேகுண்டி சம்ஸ்தானத்திற்கு மேற்கொண்ட யாத்திரையை நினைவுகூர்ந்து, காஞ்சி-ஹம்பி இடையேயான வரலாற்றுத் தொடர்புகளை விளக்கி அருளினார்கள். மேலும், சதாராவில் அமைந்துள்ள உத்தர சிதம்பர நடராஜர் ஆலயம் பூஜ்ய மகாஸ்வாமிகளால் உருவாக்கப்பட்டதையும், பல்வேறு அரசுத் துறைகளும் நிறுவனங்களும் ஒருங்கிணைந்து செயல்பட்ட அந்தப் பணி, ஆன்மீகமும் நிர்வாகமும் மக்கள் நலனுக்காக இணைந்து இயங்கும் சிறந்த முன்னுதாரணமாக அமைந்ததையும் குறிப்பிட்டார்கள்.

விஜயநகரப் பேரரசும், பேரரசர் கிருஷ்ணதேவராயரும் வரலாறு, கலாச்சாரம் மற்றும் நாகரிக வளர்ச்சிக்கு வழங்கிய பங்களிப்புகளையும் எடுத்துரைத்தார்கள். மேலும், தானம், தவம் போன்ற தர்மச் செயல்களை அனைவரும் கடைப்பிடிக்க வேண்டிய அவசியத்தையும் வலியுறுத்தினார்கள்.

இந்நிகழ்வை ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி விஸ்வ மகாவித்யாலயா (SCSVMV), ஏனாத்தூர், காஞ்சிபுரம் ஏற்பாடு செய்திருந்தது.

அன்று மாலை, 133வது ஜெயந்தி மகோத்ஸவத்தை முன்னிட்டு ஸ்வர்ண ரதோத்ஸவம் ராஜவீதிகளில் சிறப்பாக நடைபெற்றது. தொடர்ந்து, மாண்டலின் வித்வான் ஸ்ரீ யு. ராஜேஷ் மற்றும் குழுவினரின் இசை சமர்ப்பணமும் நடைபெற்றது.

திருக்குறள் வாழ்க்கைக்கு சிறந்த வழிகாட்டி - காஞ்சி சங்கராச்சார்யர்

திருக்குறளை மையமாகக் கொண்ட நூல் வெளியீட்டு விழாவில் பூஜ்யஸ்ரீ சங்கராச்சார்ய ஸ்வாமிகள், திருக்குறள் மனிதகுலத்திற்கு சிறந்த வாழ்க்கை வழிகாட்டியாகவும், அனைவருக்கும் பொதுவான உயர்ந்த ஒழுக்க மதிப்புகளை எடுத்துரைப்பதாகவும் கூறினார்கள். மேலும், பகவத் கீதையுடனான அதன் ஆழமான ஒற்றுமைகளையும் விளக்கினார்கள்.

சுமார் 2800 பக்கங்களைக் கொண்ட இரு தொகுதிகள், வைகாசி அனுஷம் தினமான 31 மே 2026 அன்று, காஞ்சிபுரம் ஸ்ரீ காஞ்சி சங்கர மடத்தில் பூஜ்ய ஸ்வாமிகளின் அருளாசியுடன் வெளியிடப்பட்டன.

(தொடரும்)

## *மஹா பெரியவா பொன்மொழிகள்*

- *பக்தி மனதில் வேரூன்றினால் பகைவன் மீதும் அன்பு செலுத்தும் பண்பு வரும்.*
- *அன்றாடம் கடவுளைத் தியானம் செய்யப் பழகினால், மனம் பாவ விஷயங்களில் ஈடுபட வாய்ப்பு இருக்காது.*
- *மாணவன் கல்வியை பணிவுடன் கற்க வேண்டும். பணிவு இல்லாத கல்வியால் உலகிற்கு பயன் உண்டாகாது.*

# 2. பாரதப் பாதையில் தர்மம் - உபாக்யானங்களின் வழியே

- நிதீஸ்வர ஶர்மா, திருவிடைமருதூர்.

அஞ்ஞான இருளினால் கண் கெட்ட உலகத்திற்கு, ஞானம் என்னும் மை தீட்டும் கோலினால் விழி திறக்கச் செய்து, ஸம்ஸார பந்தத்திலிருந்து ஜீவன்களை உஜ்ஜீவிக்கச் செய்யும் ஒப்பற்ற இதிஹாஸம் ஸ்ரீ மஹாபாரதம் என்று ப்ரஹ்மா மஹாபாரதத்தின் பெருமையை ஸ்ரீ வேத வ்யாஸரிடம் எடுத்துரைக்கிறார்.

**चत्वार एकतो वेदा भारतं चैकमेकतः**
**समागतैः सुरर्षिभिस्तुलामारोपितं पुरा ।**
**महत्त्वे च गुरुत्वे च ध्रियमाणं यतोऽधिकम्**
**महत्त्वाद् भारवत्वाच्च महाभारतमुच्यते ॥**

பூர்வ காலத்தில் தேவர்கள் அனைவரும் ஒன்று கூடி, ஒரு தராசின் ஒரு தட்டில் சதுர் வேதங்களையும், மறுத்தட்டில் மஹா பாரதத்தையும் வைத்து நிறுத்துப் பார்த்தனர். நான்கு வேதங்களின் தர்ம ஸூக்ஷ்மங்களை விரிவாகவும், சுலபமாகவும் இந்த இதிஹாஸமே விவரிப்பதாலும், கனத்தில் விஞ்சியிருந்ததாலும், இதற்கு 'மஹாபாரதம்' என்ற திருநாமம் நிலை பெற்றது. ஏனெனில்

**धर्मे चार्थे च कामे च मोक्षे च भरतर्षभ ।**
**यदिहास्ति तदन्यत्र यन्नेहास्ति न कुत्रचित् ॥**

உலகில் தர்மம், அர்த்தம், காமம், மோக்ஷம் என்னும் நான்கு புருஷார்த்தங்களை அறிந்து கொள்ள மஹாபாரதமானது அள்ள அள்ளக் குறையாத ஒரு சுரங்கம் போன்றது. 'இந்த இதிஹாஸத்தில் புருஷார்த்தங்கள் குறித்து என்ன சொல்லப்பட்டுள்ளதோ, அதுவே மற்ற அனைத்து இடங்களிலும் உள்ளது, இதில் எது சொல்லப்படவில்லையோ, அது இந்த உலகில் வேறு எங்கு தேடினும் கிடைக்காது' என்பதே இந்த காவ்யத்தின் ஈடு இணையற்ற பெருமையாகும்.

உலக நன்மைக்காக இந்த க்ரந்தத்தை இயற்றத் திருவுள்ளம் கொண்ட பகவான் ஸ்ரீ வேதவ்யாஸர், ப்ரஹ்மதேவரின் அனுக்ரஹத்துடன் மஹாகணபதியை இதை எழுதும்படி செய்தார். 'என் எழுத்தாணி எங்கும் நிற்காமல் தொடர்ந்து எழுத வேண்டும்' என்று கணபதி நிபந்தனை விதிக்க, பொருள் உணராமல் எந்த ஒரு ச்லோகத்தையும் தாங்கள் எழுதலாகாது' என்று வ்யாஸர் உப நிபந்தனை விதித்தார். ஸர்வஜ்ஞரான விக்னேஸ்வரர் சற்றே சிந்தித்துப் பொருளுணரும் அந்தச் சிறு பொழுதிற்குள், வேறு பல ச்லோகங்களை

இயற்றிக் கொள்ள ஏதுவாக, எளிதில் பொருள் விளங்காத பல ச்லோகங்களை 'க்ரந்த முடிச்சுகளாக' வியாஸர் அமைத்தார் என்பது இந்த காவ்யத்தின் மஹிமையைக் காட்டுகிறது. இந்த இதிஹாஸத்தின் எல்லை மனித அறிவுக்கு அப்பாற்பட்டது. தேவலோகத்தில் முப்பது லக்ஷம் ச்லோகங்களாகவும், பித்ரு லோகத்தில் பதினைந்து லக்ஷம் ச்லோகங்களாகவும், யக்ஷ-ராக்ஷஸர்களிடம் பதினான்கு லக்ஷம் ச்லோகங்களாகவும் நிலை பெற்றுள்ள இந்த இதிஹாஸம், கர்ம பூமியான இந்த லோகத்தில் மனிதர்களுக்காக ஒரு லக்ஷம் ச்லோகங்களாக உபதேசிக்கப்பட்டுள்ளது. தர்ம-அதர்மங்களின் ஸ்வரூபத்தை விளக்க, இரண்டு பெரும் விருக்ஷங்களை மரங்களை) இந்த இதிஹாஸம் தத்ரூபமாக நமக்கு உருவகப்படுத்துகிறது.

**அதர்ம வ்ருக்ஷம்:**

**दुर्योधनो मन्युमयो महाद्रुमः**
**कर्णः स्कन्धः शकुनिस्तस्य शाखाः ।**
**दुश्शासनः पुष्पफले समृद्धे**
**मूलं राजा धृतराष्ट्रोऽमनीषी ।।**

துர்யோதனன் கோபமே உருக் கொண்ட ஒரு பெருமரமாக, கர்ணன் அதன் அடிமரமாக, சகுனி கிளைகளாக, துச்சாஸனன் புஷ்ப-பழங்களாக, தன் மனதை அடக்க வல்லமையில்லாத த்ருதராஷ்ட்ரன் வேராக நிற்கிறான்.

**தர்ம வ்ருக்ஷம்:**

**युधिष्ठिरो धर्ममयो महाद्रुमः**
**स्कन्धोऽर्जुनो भीमसेनोऽस्य शाखाः ।**
**माद्रीसुतौ पुष्पफले समृद्धे**
**मूलं कृष्णो ब्रह्म च ब्राह्मणाश्च ।।**

இதற்கு நேர்மாறாக, தர்மபுத்ரரே தர்ம ஸ்வரூபமான பெருமரமாக, அர்ஜுனன் அடிமரமாக, பீமஸேனன் கிளைகளாக, மாத்ரி புத்திரர்களான நகுல- ஸஹா தேவர்கள் செழுமையான புஷ்ப பழங்களாகத் திகழ, பகவான் ஸ்ரீ க்ருஷ்ணரும் வேத-ப்ராஹ்மணர்களுமே அந்த தர்ம வ்ருக்ஷத்தை ஆணிவேராகக் காக்கிறார்கள்.

இத்தகைய மாபெரும் தர்ம ஸமுத்திரத்தில், பற்பல உபாக்யானங்கள் (கிளைக் கதைகள்) மாணிக்கக் கற்களாகப் பொதிந்துள்ளன. ஒவ்வொரு உபாக்யானமும் ஜீவன்கள் அனுஷ்டிக்க வேண்டிய அறத்தையும், அறத்தின் வழி நடப்பதால் ஏற்படும் நன்மையையும் மிகத் தெளிவாகப் போதிக்கின்றன. இத்தகு பெருமை வாய்ந்த கிளைக் கதைகளை நமது இதழின் வாயிலாக இனித் தொடர்ச்சியாகக் காண்போம். அவ்வகையில், ஆதி பர்வத்தின் அங்கமாகத் திகழும் 'பௌஷ்ய பர்வத்தில்' இருந்து நமது ஆன்மீக யாத்ரையை ஆரம்பிப்போம். குரு-சிஷ்ய பாவத்தின் அத்யுன்னத நிலையையும், சிஷ்யர்களின் அத்யந்த குரு பக்தியையும் விவரிக்கும் **ஆயோத தௌம்ய** மஹர்ஷியின் ஆச்ரம வ்ருத்தாந்தங்களை வரும் அத்யாயங்களில் விஸ்தாரமாகக் காண்போம்.

**உபாக்யான அமிர்தம் - 1: குரு ஸேவை அருளிய ஞானம் (ஆருணியின் சரித்ரம்)**

பண்டைய காலத்தில், குருகுல வாஸம் என்பது வெறும் நூலறிவைப் புகட்டும் இடமல்ல, அது ஈடு இணையற்ற குரு பக்தியையும், தடையற்ற குரு ஸேவையையும் சிஷ்யர்களுக்கு நேரிடையாக உணர்த்தும் தபோவனமாகத் திகழ்ந்தது. அத்தகைய ஒரு சிறந்த குருகுலமே ஆயோத தௌம்யர் என்னும் மாபெரும் மஹரிஷியின் குருகுலம்.

இந்த மஹரிஷிக்கு உபமன்யு, ஆருணி, பைதர் என்று மூன்று சிறந்த சிஷ்யர்கள் இருந்தார்கள். இவர்களில் பாஞ்சால தேசத்தைச் சேர்ந்தவனான ஆருணி என்ற சிஷ்யனைப் பற்றிய முதல் உபாக்யானத்தை இப்போது காண்போம்.

ஒருநாள், குரு தௌம்யர் தனது சிஷ்யனான ஆருணியை அழைத்தார். விவசாய நிலங்களுக்குச் செல்லும் நீர்வழித்தடத்தில் ஒரு சிறு உடைப்பு ஏற்பட்டிருப்பதை அறிந்த குரு, அவனிடம் போ, கழனியின் மடையைக் கட்டு என்று சுருக்கமாகக் கட்டளை இட்டார்.

உபாத்யாயரின் கட்டளையை சிரமேற் கொண்ட ஆருணி, உடனடிய அந்த வயல்வெளிக்குச் சென்றான். ஆனால், அங்கே நீரின் வேகம் அதிகமாக இருந்ததால், அந்த கழனியின் மடையைக் கட்டுவதற்கு அவனால் முடியவில்லை, அவன் பெரிதும் கஷ்டம் அடைந்தான். பலவாறு முயன்றும் பலனளிக்காத நிலையில், குருவின் வாக்கை எப்பாடுபட்டாவது நிறைவேற்ற வேண்டும் என்ற தீர்க்கமான முடிவுக்கு வந்தான்.

அப்போது அவனுக்கு ஒரு உபாயம் தோன்றியது. சரி, நானே கழனியின் மடையில் படுத்துக் கொள்வேன் என்று தனக்குள் கூறிக் கொண்டான். சற்றும் தயங்காமல், பெருக்கெடுத்து ஓடும் நீரைத் தடுத்து நிறுத்துவதற்காக, தன் உடலையே வரப்பாக்கி அந்தச் சேறும் சகதியுமான மடையில் அப்படியே படுத்துக் கொண்டான். ஆருணி அவ்வாறு செய்தவுடன், தண்ணீர் வெளியே போவது நின்றுவிட்டது. ஆஸ்ரமத்தில் நெடுநேரமாகியும் ஆருணி திரும்பி வராததைக் கண்ட குரு ஆயோத தௌம்யர், மற்ற சிஷ்யர்களிடம், பாஞ்சால தேசத்தவனான ஆருணி எங்கே போனான்? என்று விசாரித்தார். அதற்கு அவர்கள், குருவே ஆருணி, கழனியின் மடையைக் கட்ட சென்றுள்ளான் என்று பணிவுடன் பதில் அளித்தார்கள்.

உடனே தௌம்யர், ஆனால் அவன் போன இடத்துக்கு நாம் எல்லோரும் போவோம் என்று கூறிவிட்டு, சிஷ்யர்களுடன் வயல் வெளிக்குச் சென்றார். அங்கு ஆருணியைக் காணாமல், குரு உரத்த குரலில் அவனை அழைத்தார்.

**भो आरुणे पाञ्चाल्य क्वासि वत्स एहि इति ।**

ஓ! பாஞ்சால தேசத்து ஆருணியே, எங்கே இருக்கிறாய்? குழந்தாய்! வா என்று அழைத்தார்.

குருவின் திருக்குரல் செவியில் விழுந்த மறுகணமே, மடையில் படுத்திருந்த ஆருணி அந்த மடையை (மண்ணை) உடனே பிளந்து கொண்டு எழுந்து உபாத்யாயரின் முன் வந்து நின்றான்.

நான் இங்கே இருக்கிறேன், இந்தக் கழனியுடைய மடையில் வெளிப்பட்டு ஓடும் ஜலத்தைக் கட்ட முடியாமல் இருந்ததைப் கட்டுவதற்குப் படுத்து இருந்தேன் என்று அவன் கூறினான். மேலும், நான் செய்ய வேண்டிய கார்யத்தை நீங்கள் கட்டளையிட வேண்டும் என்று உபாத்யாயரைப் பார்த்துச் சொன்னான்.

தன் உடலையே அர்ப்பணித்து குரு வாக்கை நிறைவேற்றிய அவனது அத்யந்த குரு பக்தியைக் கண்டு தௌம்யர் பெரிதும் அகமகிழ்ந்தார். அவன் உடைந்த மடையைப் பிளந்து கொண்டு வந்ததால் அவனுக்கு ஒரு புதிய நாமகரணத்தைச் செய்து அனுக்ரஹித்தார்.

**यस्माद् भवान् केदारखण्डं विदार्य उत्थितः, तस्माद् उद्दालक एव नाम्ना भवान् भविष्यति इति सर्वे च ते वेदाः प्रतिभास्यन्ति सर्वाणि च धर्मशास्त्राणि इति ॥**

நீ கழனியின் மடையை உடைத்துக் கொண்டு எழுந்ததனால் 'உத்தாலகன்' என்று பெயருள்ளவனாக ஆவாய் என்று ஆசீர்வதித்தார். மேலும், என் சொல்லை நிறைவேற்றியதால் நீ ச்ரேயஸை அடைவாய், எல்லா வேதங்களும் எல்லாத் தர்ம சாஸ்த்ரங்களும் உனக்குப் ப்ரகாசிக்கும் என்று அவனுக்குச் ஸகல ஞானமும் ஸித்திக்கும்படி அருளினார்.

குருவின் பரிபூர்ண ஆசிகளைப் பெற்ற ஆருணி என்னும் உத்தாலகர், தனக்கு வேண்டிய உன்னத நிலையை அடைந்தார்.

**தர்ம ஸூக்ஷ்மம்** - குருவின் ஆக்ஞையை எவ்வித சஞ்சலமுமின்றி சிரமேற் கொண்டு, தன் உடலைப் பொருட் படுத்தாது தொண்டு செய்யும் அத்யந்த குரு பக்தி ஒன்றே, ஒருவனை ஸகல வித்யைகளிலும் சிறந்தவனாகவும், ஞானத்தின் உச்சிக்கும் கொண்டு செல்லும் என்ற ஆழமான தர்மத்தை ஆருணியின் சரித்ரம் நமக்கு உணர்த்துகிறது.

தேஹாபிமானத்தைத் துறந்து செய்த ஈடு இணையற்ற குரு ஸேவையால் தௌம்ய மஹர்ஷியின் பரிபூர்ண அனுக்ரஹத்தைப் பெற்ற ஆருணியின் கதையைத் தொடர்ந்து, அடுத்ததாக 'புலனடக்கத்தால்' உபமன்யு என்கிற சிஷ்யன் குருவின் அருளைப் பெற்ற அற்புதமான உபாக்யானத்தை அடுத்த இதழில் பருகுவோம்.

ஓம் தந்வந்தரயே நம:

# 7. ஆயுர்வேதமும் - ஸுபாஷிதமும்

## தொடர்பு

டாக்டர். சுபாலா



**தந்ததா வனத்தின் முறை**

அதிகாலையில் எழுதல், வாயைக் கழுவுதல், குச்சியின் முனையை மென்று நாராக்குதல், மெதுவாக பற்களைத் துலக்குதல், ஈறுகளையும் நன்றாகச் சுத்தம் செய்தல், பின்னர் நாக்கைச் சுத்தம் செய்தல்

**தந்த தாவனம் செய்யக் கூடாத சூழ்நிலைகள்**

ஆயுர்வேதத்தில் சில சமயங்களில் கடினமாக பல் துலக்க வேண்டாம் என கூறப்படுகிறது.

**அவை:**

காய்ச்சல் இருக்கும் போது, வாய்ப்புண் இருக்கும் போது, அதிக தாகம் இருக்கும் போது, வாந்தி ஏற்பட்ட பின், காதுவலி அல்லது கண்வலி இருக்கும் போது,

**ஆயுர்வேதக் கோட்பாடு**

தந்த தாவனம் கபத்தை நீக்கி: வாய் சுத்தம், ஜீரண சக்தி, மன புத்துணர்ச்சி, இவற்றை மேம்படுத்துகிறது.

**சுபாஷிதம்**

**''दन्तधावनहीनस्य मुखं दुर्गन्धमायुतम्''**

**அர்த்தம்:**

பல் துலக்காதவரின் வாய் துர்நாற்றமுடையதாக இருக்கும்.

நவீன அறிவியலுடன் ஒப்பீடு ஆயுர்வேதத்தின் தந்த தாவன முறைகள் இன்றைய பல் மருத்துவத்துடனும் பொருந்துகின்றன.

ஆயுர்வேதம், நவீன அறிவியல், வாயைச் சுத்தமாக வைத்தல்

Oral hygiene - குச்சியால் துலக்குதல்

Tooth brush - கப நீக்கம்

Bacteria removal ஈறு பலம்

Gum care

முடிவுரை :

தந்த தாவனம் ஆயுர்வேத தினச்சரியாவின் அடிப்படைப் பழக்கமாகும். இது வாயின் சுத்தத்தையும் உடலின் ஆரோக்கியத்தையும் பாதுகாக்கிறது. இயற்கை மரக்குச்சிகளைப் பயன்படுத்தி முறையாக பல் துலக்குதல் உடலுக்கும், மனதுக்கும் நன்மை தரும் என ஆயுர்வேதம் வலியுறுத்துகிறது.

**ஜிஹ்வா நிர்லேகனம் (Jihva Nirlekhanam) – நாக்கு சுத்தம் செய்தல் :**

ஆயுர்வேத தினசரியாவில் (Dinacharya) தந்ததாவனம் (பல் துலக்குதல்) முடிந்த பிறகு செய்ய வேண்டிய முக்கியமான செயல் ஜிஹ்வா நிர்லேகனம் ஆகும்.

**வரையறை**

நாக்கின் மேல் படிந்துள்ள மாசு, சளி, கிருமிகள் மற்றும் ஆமத்தை (அட்ச்) சிறப்பு கருவியால் அகற்றுவதே ஜிஹ்வா நிர்லேகனம் எனப்படும்.

**சாஸ்திர வாக்கியம்**

அஷ்டாங்க ஹ்ருதயம் கூறுகிறது:

'ஜிஹ்வாநிர்லேகனம் குர்யாத்'

அதாவது தினமும் நாக்கைச் சுத்தம் செய்ய வேண்டும்.

**செய்யும் முறை**

காலையில் எழுந்தவுடன் பல் துலக்க வேண்டும். தங்கம், வெள்ளி, செம்பு அல்லது ஸ்டெயின்லெஸ் ஸ்டீல் நாக்கு வழிப்பானைப் பயன்படுத்தலாம்.

நாக்கின் பின்புறத்திலிருந்து முன்புறம் நோக்கி மெதுவாக வழிக்க வேண்டும்.

**5–7 முறை செய்யலாம்.**

அதிக அழுத்தம் கொடுக்கக் கூடாது.

பின்னர் வாயை நன்றாகக் கழுவ வேண்டும்.

**பயன்கள்:-**

நாக்கின் மேல் படிந்த மாசு நீங்கும், வாய் துர்நாற்றம் குறையும், சுவை உணரும் திறன் அதிகரிக்கும், பசி நன்றாக ஏற்படும், கப தோஷம் குறையும், வாய் மற்றும் பற்களின் ஆரோக்கியம் மேம்படும், பேச்சு தெளிவாக இருக்கும்.

**ஆயுர்வேதக் கருத்து:**

நாக்கில் படியும் வெண்மையான படலம் ஆமத்தின் (Ama) அறிகுறியாகக் கருதப்படுகிறது.

இதனை நீக்குவதன் மூலம் உடலின் ஜீரண சக்தி மேம்பட உதவுகிறது.

**கண்டூஷம் (Gandsha) – வாயில் திரவத்தை நிறுத்துதல்**

**வரையறை**

மருந்து, எண்ணெய், நெய், கஷாயம் அல்லது வெதுவெதுப்பான நீரை வாயில் நிரப்பி சில நேரம் வைத்திருப்பது கண்டூஷம் எனப்படும்.

கண்டூஷத்தில் வாயை முழுமையாக நிரப்புவதால் திரவத்தை அசைக்க முடியாது.

கண்டூஷம் மற்றும் கவளம், கண்டூஷம், கவளம், வாயை முழுவதும் நிரப்புதல், சிறிதளவு திரவம் வைத்தல், திரவத்தை அசைக்க முடியாது, வாயில் கொப்பளிக்கலாம், அதிக சிகிச்சை பலன், சாதாரண பராமரிப்பு **செய்யும் முறை**

பல் துலக்குதல் மற்றும் ஜிஹ்வா நிர்லேகனம் முடிக்க வேண்டும்.

எள் எண்ணெய், தேங்காய் எண்ணெய் அல்லது மருந்து எண்ணெயை சிறிது சூடுபடுத்த வேண்டும். வாயை முழுமையாக நிரப்ப வேண்டும். கண்களில் நீர் வருதல் அல்லது வாயில் எச்சில் அதிகரித்தல் வரை வைத்திருக்க வேண்டும். பின்னர் வெளியே துப்ப வேண்டும். வெதுவெதுப்பான நீரால் வாயைக் கழுவ வேண்டும்.

**கண்ட டூஷத்தின் வகைகள்**

**1. ஸ்நிக்த கண்டூஷம்**

எண்ணெய் அல்லது நெய்யால் செய்யப்படும். வாத நோய்களுக்கு உகந்தது.

**2. சமன கண்டூஷம்**

குளிர்ச்சி தரும் மருந்துகளால் செய்யப்படும். பித்த நோய்களைத் தணிக்கும்.

**3. ஷோதன கண்டூஷம்**

காரம், புளிப்பு, உப்பு கலந்த திரவங்களால் செய்யப்படும். கபத்தை வெளியேற்றும்.

**4. ரோபண கண் டூஷம்**

காயங்களை ஆற்றும் மருந்துகளால் செய்யப்படும். வாய் புண்களுக்கு உகந்தது.

(தொடரும்)

# வேதாந்த ஸம்வத்ஸரம்

*ஸ்ரீ சுப்பராய சர்மா*

*।। ஓம் பரப்ரஹ்மஸ்வரூபாய வேதாந்தபாஸ்கராய நம: ।।*

**ய: கச்சித் ப்ரஹ்ம ஜானீயாத் ஆத்மத்வேன பரம் புமான் ।**

**ப்ரஹ்மைவ ஸ பவத்யேவ நூனம் வேதாந்தபாஸ்கர: ।।**

யாராக இருந்தாலும் பரப்பிரம்மத்தைத் தெரிந்து கொண்டவன் பிரம்மமே ஆகி விடுகிறான்.

## 53. ஞானி பிரம்மமே ஆகி விடுகிறான்!

**ஸ யோ ஹ வை தத் பரமம் ப்ரஹ்ம வேத ப்ரஹ்மைவ பவதி ।**

**முண்டகோபநிஷத் 3-2-9**

*அந்த பரப்பிரம்மத்தை அறிந்தவன் யாராக இருந்தாலும் அவன் பரப்பிரம்மமே ஆகி விடுகிறான்.*

முண்டகோபநிஷத் இந்த சந்தேசத்தை உபதேசிக்கிறது! பிரம்மத்தை அறிந்தவன் பிரம்மமே விடுகிறான். இதற்குத் தான் மோக்ஷம் என்று பெயர். சகல வேதாந்தங்களில் உடைய, சகல சாஸ்திரங்களில் உடைய, சந்தேசமும் மற்றும் சாரமும் இவ்வளவு தான்!

நம் சொரூபம் அல்லாத எந்த பொருளை அறிந்தாலும் அந்த பொருள் நாம் ஆக முடியாது. ஆனால் பிரம்மம் நம் சொரூபம் ஆனதால் பிரம்மத்தை அறிந்தவன் பிரம்மமே ஆகி விடுகிறான். எல்லா ஜீவர்களின் சொரூபமாகிய பரப்பிரம்மத்தை 'நான்' என்று அறிவதே ஆத்மஜ்ஞானம். இதை யார் வேண்டுமானாலும் அடைய முடியும். இனிப்பைத் தின்பவனுக்குத் தித்திப்பின் அனுபவமும், நெருப்பைத் தொடுபவனுக்கு சூட்டின் அனுபவமும் ஆகிறது. அதேபோல் பிரம்மத்தை அறிந்தவர் முக்தர் ஆகி விடுகின்றனர்! முக்தியில் தாரதம்யம் (ஏற்றத் தாழ்வு) இல்லை. ஆத்ம ஞானமும், மோக்ஷமும் எல்லா ஜீவிகளுக்கும் உரிமையானதே.

*।। ஓம் சாந்தி: சாந்தி: சாந்தி: ।।*

# வேத ஸூக்தங்கள்

## ஜைமினி

### விஷ்ணு ஸூக்தம்

*த்ரிமூர்த்திகளின் நடு நாயகரும், காக்கும் தொழில் செய்பவரும், தசாவதாரங்களை எடுத்தவரும், அஷ்டாக்ஷர மந்த்ரத்தால் த்யானிக்கப்படுபவருமான விஷ்ணு குறித்து வேதம் கூறுபவற்றைத் தருகிறோம். இவனையே சங்க இலக்கியம் 'மாயோன் என்று புகழும். சுமார் 32 மந்த்ரங்களால் இவர் துதிக்கப்படுகிறார். 1 ஆம் மண்டலம், 6 ஆம் மண்டலம், 7ஆம் மண்டலம் இவற்றில் இவரது துதிகள் உள்ளன. முதலில் தீர்கதமஸ் ரிஷி அருளிய முதல் மண்டல ரிக்குகளைப் பார்ப்போம்.*

1. நான் விஷ்ணுவின் வீரச் செயல்களைக் கூறுவேன். அவன் மூவுலகங்களையும் அளந்தான். மேலே இருக்கும் ஸத்ய லோகத்தைத் தாங்கினான். அவன் மூவிதமாய் காலடிகளை வைத்தான். அவன் மகான்களால் போற்றப்படுபவன்.

2. விஷ்ணுவின் மூன்று கம்பீர அடிகளிலே நடைகளிலே எல்லா உலகங்களும், நிலைக்கின்றன. வீரச் செயலுக்குப் புகழப்படும் அவன் மலையிலே திரியும் சிங்கத்தை ஒத்து இருக்கிறான்.

3. உச்சத்தில் இருப்பவனும், பலரால் போற்றப்படுபவனும், ஏகனாகவே மூவடிகளால் இவ் உலகத்தை அளந்த விஷ்ணுவிடம் என் மனமும் ப்ரார்த்தனைகளும் செல்க.

4. ஏகனாகவே மூன்று தாதுக்களையும், புவியையும், ஜோதியையும் ஏத்தும் விஷ்ணுவின் அழியாத அடிகள் அமுதத்தோடு நிறைந்த அவை மானிடர்களை இன்புறுத்துகின்றன.

5. நான் அவனுக்குப் பிரியமாய் இருப்பதும், தேவனை நாடும் மனிதர்கள் இன்புறுவதுமான வழியை பற்றி ப்ரம்ம லோகத்தை அடைவேனாக. பரந்த அடிவைக்கும் விஷ்ணுவின் பரம பதத்திலே அமுத ரசச் சுனை உள்ளது. அவன் பக்தன் விஷ்ணு பந்துவாகிறான்.

(தொடரும்)

# சுக்ர நீதி

*சுக்ர நீதி வட மொழியில் உள்ள நூல். மனு ஸ்ம்ருதிக்குப் பிறகு பெரிதும் மதிக்கப்படும் நூல். சுமார் 10ஆம் நூற்றாண்டில் இது எழுதப்பட்டு இருக்கலாம் என்பது ஆராய்ச்சியாளர்களின் கணிப்பு. அரச தர்மத்தையே பெரும்பாலும் பேசினாலும் பொதுவான தர்மங்களையும் இது கூறும். பரந்த மனப்பான்மையுடன் இது எழுதப்பட்டு உள்ளது என்றால் மிகையாகாது. மொத்தம் ஐந்து அத்யாயங்களைக் கொண்டது.*

**மூன்றாம் அத்யாயத்தில் பொதுவான தர்மங்களை விரிவாகக் கூறும். ஸ்ரீ பண்டிதமணி கதிரேசன் செட்டியார் இதை வட மொழியிலிருந்து மிகச் சிறப்பாக மொழி பெயர்த்து உள்ளார். அதை ஒட்டியே நாமும் தருகிறோம்.**

கற்பிற் சிறந்த மனைவி, மாற்றாந் தாய், தாய், மணம் செய்து கொள்ளாத மகன், தந்தை, கணவனும், புதல்வனும் இல்லாத கைம்பெண், தமக்கை, தங்கை, மாமி, தாய்வழி பாட்டன், தந்தை வழி பாட்டன் இருவர் வழி சந்ததியினர், தந்தையில்லா தௌஹித்ரன் தம்பி உடன் பிறந்தாள், புதல்வன் ஆகிய இவர்களை இயன்றவரை முயன்று அவசியம் பரிபாலித்தல் வேண்டும். (என்னே மனித நேயம். இன்றும் பல குடும்பங்களில் இம்முறை உள்ளது.) மேற்கத்திய கலாசாரம் இதிலிருந்து முற்றிலும் வேறுபட்டதாக உள்ளது.)

செல்வம் இல்லாத போதும் முற்கூறப்பட்டோரைக் காத்தல் வேண்டும். செல்வம் நிறைந்திருக்குமாயின் தன்பால் அன்பு மிக்க தந்தை குலத்தரையும், தாய் குலத்தரையும், மனைவி பிறந்த குலத்தரையும், அடிமையாள், அடிமைப் பெண், வேலைக்காரர் இவர்களையும் காத்தல் வேண்டும்.

அங்கஹீனர்களையும், துறவிகளையும், வறியவரையும், சார்பில்லாதவரையும் காத்தல் வேண்டும்.

எவன் தன் குடும்பத்தைக் காப்பதில் முயற்சி இல்லாதவனாக உள்ளானோ அவனுக்கு கல்வி முதலிய பிற குணங்களால் என்ன பயன் ? அவன் உயிரோடிருப்பினும் இறந்தவனே.

எவன் தன் குடும்பத்தைக் காக்காமலும், பகைவரை அழிக்காமலும் உள்ள பொருளைக் காக்காமலும் உள்ளானோ அவனுக்கு உயிர் வாழ்க்கையால் என்ன பயன்?

கடனாளி, பெண்களால் வசியப்பட்டவன், மிக்க வறுமையாளன், இழி குணத்தோன் இழிந்த பொருள், வருவாய் உள்ளவன் ஆகிய இவர்களும் உயிரோடு இருப்பினும் இறந்தவரே.

ஒருவன் தன் வாழ் நாளில் தன் வருமானம், இல்லத்தில் நிகழும் பிழை, மந்திரம், மருந்து பெண் புணர்ச்சி, கொடை, மானம், அவமானம் இவற்றை யாரிடமும் வெளிப்படுத்தலாகாது. ( இவை அக்கப்போருக்கு அச்சாரமாகும். )


|| श्रीः ||



|| श्रीकामकोटिप्रदीपः ||

ஸ்ரீ காமகோடி ப்ரதீபம்



ஸ்ரீ ஆதி சங்கர பரம்பராகத ஸ்ரீ காஞ்சீ காமகோடி மூலாம்நாய ஸர்வஜ்ஞ பீடம்
ஜகத்குரு பூஜ்யஸ்ரீ சங்கராசார்ய ஸ்வாமிகள் அனுக்ரஹத்துடன்,
ஸ்ரீ காமகோடி கோசஸ்தானத்தால் வெளியிடப்படும் மாதாந்திர பத்திரிக்கை






SRI KAMAKOTI KOSASTHANAM
SCAN & PAY

UPI ID : 6005671674skk@indianbk

சந்தா விபரம்

ஒரு வருடம் - ரூ.220/- மூன்று வருடம் - ரூ. 600/-
ஐந்து வருடம் - ரூ. 1000/- ஆயுள் சந்தா - ரூ. 5000/-

சந்தாவினை புதுப்பிப்பவர்கள் மற்றும் புது சந்தாவிற்கு QR code மூலம் பணம் செலுத்தி, பெயர், விலாசம், கைப்பேசி எண் மற்றும் சந்தா தொகை வங்கி பரிமாற்ற விபரத்துடன் அனுப்பி வைக்க கேட்டுக் கொள்கிறோம். kamakotipradeepam@gmail.com அல்லது + 91 90038 45456 (WhatsApp)

# மகா பெரியவாளின் நினைவு மஞ்சரி

**சுந்தரம் ஐயர்**
வாலாஜா



பெரியவாளை தரிசனம் செய்ய நிறைய வெளி நாட்டவர் வருவர். டெமெட்ரின் என்னும் ப்ரெஞ்சு நாட்டவர் பெரியவாளிடம் வந்தார். பெரியவாளுக்கு எந்த தொந்தரவும் தராமல் தூரத்தில் இருந்தபடியே தரிசனம் செய்து கொள்வார். பிறகு டைரியில் ஏதோ எழுதுவார். அவர் என்ன ஏழுதுகிறார் என்று பார்க்க ஆவலாய் இருந்தது. அதில் முக்ய விஷயம் 'I see Christ in His face' என்பதாகும்.

எனக்கு மிகவும் வியப்பாய் இருந்தது. அவர் பின்பு ஆச்சார்ய பக்தனாக மாறி காஞ்சியிலேயே தங்கி விட்டார். (தன் பெயரை தேவ மித்ரன் என்றும் மாற்றிக் கொண்டார் )

மற்றொரு சம்பவம் கார்வேட் நகரில் பூஜ்ய ஸ்ரீ பெரியவா முகாமிட்டிருந்தார். பெரியவாளுடைய ஜயந்தி தினம். ஏழைகளுக்கு அன்னதானம் நடந்தது. நான் தரிசனம் செய்து கொண்ட பின் அன்று இரவே என்னை ஊருக்குப் போகச் சொன்னார்கள். நான் கேட்காமல் தங்கி விட்டேன். மறு நாள் காலை முனுசாமி ஐயா என்பவர் வந்து உடனே என்னை ஊருக்குப் போகப் பெரியவா

சொன்னார்கள் என்றார். என்ன தவறு செய்தோம் என்று பயந்து வாலாஜாவிற்கு வந்தேன். ஆச்சர்யம் எனக்கு ஆசிரியர் பயிற்சிக்கு உத்தரவு வந்திருந்தது. ஒரு சமயம் பெரியவா தேனம்பாக்கத்தில் இருந்தார். நிறைய பக்தர்கள் நடுவில் இரண்டு ஆங்கிலேயப் பெண்மணிகள். அவர்களிடம் அவர்களுடைய கோரிக்கை என்னவென்று கேட்டேன். இதைப் பார்த்த பெரியவா 'அவர்கள் உத்தரவு வாங்கிக் கொள்கிறார்களா? என்று வினவ அவர்கள் ஆம் என்றனர். அவர்களை ஆசீர்வதித்து உத்தரவு கொடுத்தார் பெரியவா. இது பற்றி ஸ்ரீகண்டன் என்னிடம் கூறியது :-

அவர்கள் ப்ரென்சு நாட்டினர். அவர்கள் கனவில் பெரியவா தோன்ற அவர்கள் மும்பை வந்து அங்கிருந்து இங்கே வந்தனர். அந்த நாளில் காலை 11 மணிக்குப் பெரியவா பூஜைக்குப் போகவில்லை. ஸ்ரீ கண்டன் இதைத் தெரிவிக்க, பெரியவா வெளியூரில் இருந்து இரண்டு பேர் வருகிறார்கள் காத்திருந்து போவேன் என்றார். அவர்களும் ஒரு ப்ரென்ஞ் மொழி பெயர்ப்பாளருடன் வந்து நமஸ்கரித்து உரையாட விருப்பம் தெரிவிக்க பெரியவாளும் மொழி பெயர்ப்பாளர் இல்லாமல் அவர்களுடன் ப்ரெஞ்சில் உரையாடி அவர்களது ஐயங்களைப் போக்கினார். மேதா விலாஸம் மட்டுமல்ல காருண்யம் நிரம்பி வழியும் பெரியவாளுக்கு. என்ன பாக்யம் அந்த ப்ரென்சு தேசத்தவருக்கு.

(தொடரும்)

ஜய ஜய சங்கர உ ஹர ஹர சங்கர

ஸ்ரீ

தர்மோ ரக்ஷதி ரக்ஷித:

## ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடம்

சீடர்களின் கவனத்திற்கு

**ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடம் ஜகத்குரு ஸ்ரீ சங்கராச்சார்ய ஸ்வாமிகளின்**

சீடர்களாகிய நாம் நமது குடும்பத்தில் அவ்வப்பொழுது நடைபெறும்
சுபநிகழ்ச்சிகளுக்கு பத்திரிகைகள் தயார் செய்யும்போது
கீழ்க்கண்ட வாசகங்களை முதலில் அமைப்பது சாலச் சிறந்ததாகும்.

**"ஸ்ரீ மஹா த்ரிபுரசுந்தரி ஸமேத ஸ்ரீ சந்திர மௌளீஸ்வர ஸ்வாமி க்ருபையுடன்,
ஸ்ரீ ஆதிசங்கர பகவத்பாதாள் பரம்பராகத மூலாம்நாய ஸர்வக்ஞபீடம்
ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதி ஜகத்குரு ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ சங்கராச்சார்ய
ஸ்வாமிகள் பரிபூரண அனுக்ரஹத்துடன்**

# ப்ரபோத சிந்தாமணி

*ஸ்ரீ எஸ். ராமசந்திர ஐயர்*

## 33. சுகம் நம்மிடமே உள்ளது

'சுகம்' என்ற சொல் மிகவும் அழகானது, எல்லோருக்கும் விருப்பமானது. இதைத் தான் ஆங்கிலத்தில், Happiness, Bliss, Peace, Tranquillity, Ease, Rest, Calmness என்றெல்லாம் சொல்கிறார்கள். சுகம் என்ற சொல்லிற்கு சம்ஸ்கிருதத்தில் விசேஷமான அர்த்தம் உண்டு. **'சோபனானி கானி யஸ்மின் தத் ஸுகம்'** அதாவது சுபமாகிய இந்திரிய மனோபுத்திகள் உள்ள மனதின் ஆனந்த நிலையே **'சுகம்'** எனப்படும்.

இப்படிப்பட்ட சுகம் யாருக்குத் தான் வேண்டாம் ? ஒவ்வொரு மனிதனும் கடிகாரத்தின் முள் சுற்றுவது போல் ஓயாமல் ஒழியாமல் உழைப்பது, சுகத்தைச் சம்பாதிப்பதற்கே என்பது எல்லோருக்கும் தெரிந்ததே. சின்னக் குழந்தையிலிருந்து நூறு வயது மனிதன் வரை ஒவ்வொருவரும் வாழ்வது சுகத்திற்காகவே. சுகத்திற்காக பணம், சுகத்திற்காக வீடு, சுகத்திற்காக பொன், வெள்ளி, ஆபரணங்கள், கார், பங்களா, பதவி, ஆரோக்கியம் முதலியவை, மொத்தத்தில் சுகத்திற்காகவே இந்த சம்சார ஜீவனம். இந்தக் கருத்து நூற்றுக்கு நூறு உண்மை.

ஆனால்.....! இந்த போக சம்பத்துக்களினால் யாருக்காவது சுகம் கிடைத்திருக்கிறதா? இந்தக் கேள்விக்கு என்ன பதில் தெரியுமா ? ''சுகம் இன்னும் கிடைக்கவில்லை, இனி மேல் கிடைக்கலாம்'' என்பதே. இது என்ன விபரீதமான கருத்து! இவைகளால் கண்டிப்பாக சுகம் கிடைக்காது என்று தெரிந்திருந்தும், அதற்காக வாழ்க்கை முழுவதும் உழல்வது பிரமை தானே! சுகம் கடைகளில் பணம் கொடுத்து வாங்கும் பொருள் அல்ல. நினைவு இருக்கட்டும்.

அப்படி என்றால் சுகம் எங்கு கிடைக்கிறது ? எப்படிக் கிடைக்கும் ? சுகம் நமக்குள்ளேயே இருக்கிறது. விவேகத்தினால் மட்டுமே அடையக் கூடியது. **Happiness is the state of MIND. It is within us. It cannot be purchased in shops. Happiness can be easily experienced by one** and all. நாமே ஆராய்ந்து பார்த்தால், நாம் சுகசொரூபமாகவே உள்ளோம். ஆனந்தத்தின் இருப்பிடம் நாமே. சுகம் நம் நிஜ சொரூபமே என்ற ஞானத்தை அடைவோமாக.

(தொடரும்)

# கண்டாகர்ணன்

(கண்டாகர்ணக்ருதா விஷ்ணுஸ்தவப்ரார்தநா தஸ்ய ஸமாதிலாபம்)

*பகுதியின் சுருக்கம்:*
*பிசாசுகளிடம் பேசிய கிருஷ்ணன்; வரலாற்றைச் சொன்ன பிசாசு;*
*கண்டாகர்ணனின் விஷ்ணு ஸ்தவப் ப்ரார்த்தனை...*

ஒவ்வொரு கல்பத்தின் தொடக்கத்திலும் இதற்கு முந்தைய கல்பத்தின் முடிவில் கலந்த புருஷோத்தமனின் குடலுக்குள் இருந்து வெளிப்படுகிறது. அண்டம் வெளிப்பட்டதும், நாம் இப்போது காண விரும்பும் பிரபுவால் காக்கப்பட்டு, கட்டுப்படுத்தப்படுகிறது. அவனே அண்டம் வெளிப்பட உண்மைக் காரணனும், அண்டத்தைக் காத்து அழிப்பவனும், நித்தியமானவனும், அழிவற்ற ஆதி தேவனும், அண்டத்தின் தலைவனும் ஆவான்.

சுயம்புவான பிரம்மனைப் படைத்தவன் தலைவன் ஹரியே. விஷ்ணு வடிவாக இருக்கும் அண்டத்தைப் பாதுகாப்பவனும் அவனே. யோக ஆசானும், தன் பக்தர்களுக்குத் தூய புத்தியை அருள்பவனுமான அந்த ஹரியை, நாங்கள் சந்திப்போம் என நம்புகிறோம். எங்கள் மனங்கள் இப்போது அவனிடமே நிலைத்திருக்கின்றன. அழிவேற்படும் காலத்தில் மூவுலகங்களின் உறைவிடமாகத் திகழும் ஹரி மொத்த அண்ட வெளிப்பாட்டையும் தன் உடலுக்குள் இழுத்துக் கொள்கிறான். பிறகு அவன் ஒரு குழந்தையைப் போலக் கைகளையும், கால்களையும் அசைத்துக் கொண்டு ஆலிலையில் வெளிப்படுகிறான்.

புராதன முனிவரான மார்க்கண்டேயர் அந்தத் தலைவனின் வயிற்றுக்குள் நுழைந்து அவனுடைய அருளால் மொத்த படைப்பையும் அங்கே கண்டார். அவர் மொத்த அண்டத்தையும் வெளியே கண்டது போலவே, அந்தத் தலைவனின் வயிற்றுக்குள்ளும் கண்டார். பழங்காலத்தில் அந்தப் பரமாத்மா மொத்த அண்டத்தையும் தன்னுள் ஈர்த்துக் கொண்டு, அந்த அழிவில் உண்டான நீரில் கிடந்திருந்தான். அந்நேரத்தில் ஸ்ரீதேவி கையில் சாமரத்துடன் அவனுக்குத் தொண்டாற்றினாள்.

படைப்பின் தொடக்கத்தில் தலைவனின் நாபியில் இருந்து ஒரு பொற்தாமரை மலர் உதித்தது. அழகிய இதழ்களைக் கொண்ட அந்த அண்டத் தாமரையே அண்டத்தின் ஆன்ம குருவான பிரம்மனின் பிறப்பிடமாகத் திகழ்ந்தது. பழங்காலத்தில் பன்றியின் வடிவை ஏற்ற அந்தப் பரமனைக் காண நாங்கள் ஆவலாக இருக்கிறோம். பெரும்

முனிவர்களால் துதிக்கப்பட்ட அவன், புயல் மேகங்களைப் போலக் கர்ஜித்துக் கொண்டு நீருக்குள் இருந்த பூமியைத் தன் தந்தங்களால் காத்தான். பிரபுவும், புராதனனும், புருஷோத்தமனுமான அந்த ஹரியே சாட்சியாகவும், வேள்வியின் வடிவமாகவும், காக்கும் வேள்வியின் தலைவனாகவும் இருக்கிறான்.

சிவ பக்தர்கள், இந்திரனின் தலைமையிலான தேவர்களின் பல்வேறு வடிவங்களிலும் விஷ்ணுவைக் கண்டு அந்தப் புறவடிவத்தையே வழிபடுகின்றனர். வேதாந்தத்தால் உறுதி செய்யப்படும் அத்வைதப் பொருளாலான உடலைக் கொண்ட அந்தத் தேவனைக் காணவே நாங்கள் ஆவலுடன் இருக்கிறோம். பல்வேறு வகைகளில் விளக்கப்படுபவனும், ஸ்ருதிகள், ஸ்மிருதிகள், தர்க்கம் தொடர்புடைய கல்விமான்கள் பலரால் பல்வேறு வடிவங்களைக் கொண்டவனாகச் சொல்லப்படுபவனும், புராணங்களை தன்னைத் தூய்மையாக்கிக் கொள்ளும் அவனது முயற்சி அற்பமானதே. எனவே, ஓ ! ஜனார்த்தனா, என் மனத்தைப் பாதுகாப்பாயாக. புலன்கள் வலிமை மிக்கவை என்பதால் அவற்றைக் கட்டுப்படுத்துவதில் எனக்கு உதவி செய்வாயாக.


ஓ! ஜகந்நாதா, பிறரை விமர்சிக்க என் சொற்களை அனுமதியாதே. பிறரின் செல்வத்திலும், மனைவிகளிடமும் பற்றுக் கொள்ள என் மனத்தை அனுமதியாதே. ஓ! கேசவா, அனைத்து உயிரினங்களிடமும் என் மனத்தில் கருணை உண்டாக அருள் செய்வாயாக. உன்னிடம் ஓயாத பற்றையும், உயிரினங்கள் அனைத்திடமும் கருணையையும் வளர்ப்பேனாக. இதற்கு மேலும் சொல்லி என்ன பயன்? என் வேண்டுதலைக் கேட்பாயாக. ஓ! தேவேசா, ஜனார்த்தனா, இன்பத்திலும், துன்பத்திலும், கோபத்திலும், உண்ணும் போதும், நடக்கும் போதும், விழித்திருக்கும் போதும், கனவிலும் என் மனம் எப்போதும் உன்னில் இன்புற்றிருக்கட்டும். நான் உன்னை வணங்குகிறேன் என்றான் கண்டாகர்ணன்

முன்னர் தாழ்ந்த குலத்தில் பிறந்த அந்தப் பயங்கரப் பிசாசு ஆனவன் இவ்வாறு சொன்ன படியே சமாதியில் ஆழ்ந்தான். உண்மையில் அவன் தேவனின் பரம பக்தனாகி அவனைச் சரணடைந்தான். மாமிசம் உண்ணும் அந்தப் பிசாசு ஆனவன், குடல்களாலான கயிறுகளில் தன் உடலைக் கட்டி, மனத்தைக் கவனமாகக் கட்டுப்படுத்தி அமர்ந்தவாறே, பீதாம்பரம் உடுத்துபவனும், அண்ட வெளிப்பாட்டின் பிறப்பிடமும் (ஜகத்யோனியும்) நீ மங்கலனுமான விஷ்ணுவைத் தியானிக்கத் தொடங்கினான்.

ஆதிபுருஷனும், தன்னைப் போல் வேறொருவன் இல்லாதவனும், தூய்மையின் கொள்ளிடமும், அறிவை விளைவிக்கும் பொருளும், அனைத்து உயிரினங்களின் குருவுமான முகுந்தனிடம் (கிருஷ்ணனிடம்) அவன் தன் மனத்தை நிலை நிறுத்தினான்.

அவன் தன் மூக்கின் நுனியில் தன் கண்களை நிலைநிறுத்தி, ஓம் எனும் புனித அக்ஷரத்தை ஓதி, காற்றில்லாத இடத்தில் உள்ள விளக்கைப் போல மனத்தில் உறுதி அடைந்தான். ஓம் எனும் பிரணவ வசனத்தையே பிரம்மமாகக் கருதி முழுமையாக விஷ்ணுவில் மனத்தைக் குவித்தான். தியானம் பயின்றதன் மூலம் அவன் தன் அலை பாயாத மனத்தைத் தாமரை போன்ற இதயத்தில் நிலைநிறுத்தினான். பெரும் யோகியும், மாமிசம் உண்பவனுமான அந்தப் பிசாசானவன் (கண்டாகர்ணன்), தாமரை போன்ற தன் இதயத்தில் அண்டத்தின் தலைவனை நிலை நிறுத்திய பிறகு அமைதியாக அமர்ந்து விஷ்ணுவைத் தியானிக்கத் தொடங்கினான்‘ (என்றார் வைசம்பாயனர்).

(தொடரும்)



*ஆசார்யாள் வேதாந்தத்தையும் சொல்லி, பக்தியும் சொல்லி, ஸதாசாரத்தையும் சொல்லி, ஒரு மனிதனுடைய Life-க்கு ஜீவனத்துக்கு - ஒரு guidance, balance-ஸா Material life-ல இருக்கிறவங்களுக்கும் சரி, Philosophy -ன்னு நினைக்கிறவங்களுக்கும் சரி மனிதர்களுடைய தராதரம் தெரிஞ்சி, மனிதர்களுடைய சக்தியை தெரிஞ்சி, மனிதர்களுடைய கோரிக்கைய தெரிஞ்சு- ஒரு எட்டு வயஸுலேர்ந்து. முப்பத்தி ரெண்டு வயதிற்குள்ள இந்த உலகத்த பத்தி புரிஞ்சிண்டு, உலகத்துக்காக பரிஞ்சிண்டு- எல்லாருக்கும் அவர் ப்ரார்த்தனை பண்றார்.*

*இந்தியாவை பொறுத்த வரைக்கும், மரத்த பாத்தா தர்மம் ஞாபகத்துக்கு வரும். நதியை பாத்தா, தர்மம் ஞாபகத்துக்கு வரும். செடி கொடிய பாத்தா, தர்மம் ஞாபகத்துக்கு வரும். சாப்பாட்லையும் தர்மம் ஞாபத்துக்கு வரும். எல்லா விதத்துலையும், தர்மம், பக்தி, ஸாத்வீகம், ஸதாசாரம், த்யாகம், இதல உணர்த்தி இருக்காங்க.*

## *தாயுமான ஸ்வாமிகள் அருளிய*
## *தக்ஷிணாமூர்த்தி துதி:-*



***ஆக்கையெனும் இடிகரையை மெய்யேன்ற பாவி நான்***
***அத்துவித வாஞ்சையாதல்***
***அரிய கொம்பில்தேனை முடவன்***
***இச்சித்தப்படியாகும் அறிவ விழ வின்பம்***
***தாக்கும்வரை ஏதி[ந்] நாள் சரியை கிரியா***
***யோக சாதனம் விடுத்ததெல்லாம்***
***சன்மார்க்கமல்ல இவை நிற்க என்***
***மார்க்கங்கள் சாராத பேறரிவதாய்***
***வாக்கு மனம் அணுகாத பூரணப் பொருள்***
***வந்து வாய்க்கும்படிக்குபாயம்***
***வருவி துவட்டாத பேரின்பமானசுக***
***வாரியினை வாய் மடுத்துத்***
***தேக்கித் திளைக்க நீ முன்னிற்பது காண்***
***சித்தாந்த முத்தி முதலே***
***சிரகிரி விளங்க வரு தக்ஷிணாமூர்த்தியே***
***சின்மயானந்த குருவே***

*பொருள் :- வீடு பேற்றை அளிக்கின்ற முழு முதலே ! திருச்சிராப்பள்ளியில் உயிர்கள் உய்யுமாறு வீற்றிருக்கும் தக்ஷிணாமூர்த்தியே ! பேரறிவு பேரின்பத்தை அளிக்கின்ற மெய்மை உடைய குருவே ! உடல் என்று அழைக்கப்படும் அழிந்த ஆற்றின் கரையை அழியாது உள்ள உண்மைப் பொருள் என்று எண்ணி வாழும் பாவி நான்.*

*அத்துவிதப் பொருளின் மீது விருப்பம் வைத்தல் என்பது முடவன் கொம்புத் தேனுக்கு ஆசைப்படல் போலும். ஆதலால் என் அறிவானது விரியும்படி இன்பம் உண்டாகின்ற வகை யாது? இன்னாள் வரை சரியை, கிரியை, யோகம் என்னும் பழக்கத்தைக் கொள்ளாமல் விட்டது நன்னெறி ஆகாது. இவை நிற்க. எத்தகைய நெறிகளும் அணுகாத பெருமை உடைய அறிவு உருவாகிய சொல்லும் மெய்ப்பொருள் எளியேனுக்கு வந்து வாய்க்கும்படி தெவிட்டாத பேரானந்தமான இன்பக் கடலை நிறைய அனுபவிக்க நீ என் முன் தோன்றுவது என்று ?*